Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

இலவசப் பிரதி

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-24 06-02-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை -354

S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11252)

# பொதுக்கட்டமைப்பு நிறுவுவதற்கான சாத்தியம் குறித்து உறுதி கூற முடியாது

## புதுப்புது நிபந்தனைகளை அரசு விதிக்கின்றது என சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)


**பொதுக்கூட்டமைப்பு ஒன்றை நிறுவுவது எவ்வளவு தூரம் சாத்தியப்பாடானது என்பதை தற்பொழுது எங்களால் கூற முடியாது. ஏனெனில் அரசாங்கம் புதுப்புது நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருப்பதாகத்தான் தெரிகின்றதேயொழிய ஒரு பொதுக் கட்டமைப்பை நிறுவுவதற்கு மனப்பூர்வமாக முன்வருவதாகத் தெரியவில்லை. இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நேற்றுக்காலை 10.00 மணியளவில் நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருடனான சந்திப்பை முடித்துக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப் பாளர் கௌசல்யன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மேற்படி சந்திப்புப் பற்றி அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் நடைபெற்ற சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எமது கரையோரப் பகுதி மக்களுக்கான உடனடி மனிதாபிமானப் பணிகள், நிவாரணப் பணிகள், மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு சிறிலங்கா அரசாங்கத்தையும், விடுதலைப்புலிகளையும் இணைத்து ஒரு பொதுக் கட்டமைப்பொன்றை நிறுவுவதுசம்பந்தமாகக் கடந்த காலங்களில் உரையாடப்பட்டு வந் தது. அந்த வகையில் நோர்வே அனுசரணையாளர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)



## திருக்கோவில் பிரதேச செயலகத்தில் தேசியத்தலைவரின் படத்தை அகற்ற முயன்றதால் சர்ச்சை!

நேற்றைய தினம் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் உள்ள தேசியத்தலைவரின் படத்தை அகற்றிவிட்டு அவ்விடத்தில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் படத்தை மாட்டி இருந்தமையால் கலவரமடைந்த மக்களுக்கும், இராணுவத்திற்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கவியாளனிடம் பொதுமக்கள் முறையிட்டதை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற கவியாளனைப் படையினர் சுட முயன் (12ஆம் பக்கம் பார்க்க)

## வட கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவளத்துணை வழங்க நிதியுதவி; நோர்வேத் தூதுவர் முன்வந்தார்

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் உளவளத்துணையினை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தாம் நிதியுதவியினை வழங்கவுள்ளதாக நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதுவர்ஹான்ஸ் பிரஸ்கர் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்த ஹான்ஸ் பிரஸ்கர் அடங்கிய குழுவினர் அரசியல் துறைப் பொறுப்பாளருடனான

(12ஆம் பக்கம் பார்க்க)



## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ எல்லோரையும் உற்சாகப்படுத்துகிறோம்

### நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர்

" சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் செய்ய வேண்டிய உதவி நடவடிக்கைகளுக்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் உற்சாகப் படுத்துகின்றோம்." என நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் தெரிவித்தார்.

நேற்றைய் தினம் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் குழுவினருடனான சந்திப்பின் பின் கருத்து வெளியிட்ட ஹான்ஸ்பிரஸ்கர் தொடர்ந்து கூறுகையில், "ஏற்கனவே நடைபெறும் நல்ல

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியின் பின்னரும் போர் நிறுத்தத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை

### போர் நிறுத்தக் க.கா.குழு பதில் தலைவர் தெரிவிப்பு

சுனாமியின் முன்பும், பின்பும் போர் நிறுத்தம் ஒரே மாதிரியாகவே இருக்கிறது அதில் மாற்றமில்லை. சில முறைப்பாடுகள் குறித்து நாம் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகிறோம். என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் வொகன் விங்கிள் தெரிவித்தார். அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், இலங்கை போர் நிறுத்தக் (12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை முன்னாள் அமெ.சனாதிபதிகள் பார்வையிடுவர்

அமெரிக்க முன்னாள் சனாதிபதிகளான பில்கிளின்ரன் மற்றும் ஜோர்ஜ் புஷ் அடங்கிய ஒரு குழுவினர் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவார்கள் என அமெரிக்காவின் தற்போதைய சனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று அறிவித்துள்ளார்.

இம் மாதம் 19ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவிருக்கும் இவ் விஜயம், இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் மாலதீவு நாடுகளை உள்ளடக்கியதாக இருக்கும் எனவும் வெள்ளை மாளிகை மேலும் தெரிவித்துள்ளது. ஆழிப்பேரலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சடலமாக மீட்பு

தலைமன்னாரில் கடந்த 2ஆம் திகதியிலிருந்து காணாமல் போனதாகக் கூறப்பட்ட ஒருவர் இறந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளார். 47 வயதான முத்துசாமி குமாரவேல் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் பதில் நீதவான் எம்.பி.பாருக் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (32)



## வரிவிளம்பரம்

### பொய்கை

சகலவிதமான கணினி வேலைகளும் விரைவாகச் செய்து கொடுக்கப்படும். அத்துடன் அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள். பொய்கை. கனகபுரம்தெரு, கிளிநொச்சி. (5627)

### காணி விற்பனைக்குண்டு

ஏ-9 வீதியிலிருந்து வண்டோட்டினூடாக 500 மீற்றர் தூரத்திலுள்ள 1/2ஏக்கர் உறுதிக்காணி, கட்டுக்கிணறு, வீட்டுடன் கூடியது விற்பனைக்குள்ளது. தொடர்புகளுக்கு கோ.சிவராஜா, இல39, திருநகர் வடக்கு,கிளிநொச்சி. (5633)


# தெல்லிப்பழை கூ.ச கிளைமுன் இருவாரத்தில் 3 ஈருருளிகள் திருட்டு

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு முன்னால் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளையின் முன்னால் பொருட்கள் வாங்க வந்தவர்களின் மூன்று ஈருருளிகள் இருவார காலத்தினுள் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பெண்களுக்கான ஈருருளி ஒன்று திருடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு ஈருருளிகள் திருடப்பட்ட போதிலும் கூட உரிய நடவடிக்கை சிறிலங்கா பொலிசார் மேற்கொள்ளவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து இப்பகுதியில் விடப்படும் ஈருருளிகளை திருடுவதால் மிகவும் கவனமாக அப்பகுதியில் உள்ளவர்களே குழுவாக செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (41)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு நீதிமன்றம் கூட நியாயமான நீதியை வழங்கவில்லை

## -பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(நல்லூர்)

இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு நீதி வேண்டி சிறிலங்காவின் நீதிமன்றத்திற்குச் சென்றபோதும் கூட அம்மக்களுக்கு நியாயமான நீதியை நீதிமன்றம் வழங்கவில்லையென மக்கள் குமுறும் நிலமையே ஏற்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களை வேறு இடங்களில் குடியேற்றுவது என்பது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பதனையிட்டும் சிந்திக்க வேண்டும்.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் க.கஜேந்திரன் குறிப்பிட்டார்.

வலி வடக்குப் பிரதேச செயலகத்தின் முன்னர் சிறிலங்காவின் சுதந்திர தினமான நேற்று முன்தினம் யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்களின் சமாசத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மறியற்போராட்டம் வலி வடக்கு பொது அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கஜேந்திரன் சொந்த இடத்தில் வாழ வேண்டும். தொழில் செய்ய வேண்டும் என்பதற்காகவே இடம்பெயர்ந்த மக்கள் தமது நியாயமான உரிமையைக் கேட்டு நீதிமன்றத்திற்குச் சென்றனர். அங்கும் இவ் இடம்பெயர்ந்த மக்களுக்குச் சரியான முறையில் தீர்வு கிடைக்கவில்லை. வேறு இடத்தில் இம்மக்களைக் குடியேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்வது பற்றி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தமது சொந்த இடங்களில் சமூகக் கடப்பாட்டின் கீழ், உறவுகளுடன் இணைந்து சொந்த மண்ணில், சொந்த வீடுகளில், சொந்தமாகத் தொழில்களை மேற்கொண்டு வந்துள்ளார்கள். இவர்களை வேறு இடத்திற்கு மாற்ற சாத்தியப்பட மாட்டாது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாகி நிர்க்கதியான நிலமையில் இருக்கின்றார்கள். இவர்களுடைய பிரச்சினை என்பது மனிதாபிமான ரீதியில் நோக்கப்பட வேண்டும். இந்த இடம்பெயர்ந்த மக்களுடைய பிள்ளைகளின் கல்வி கூடப் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது.

எமது சொந்த இடத்திலேயே நாம் வாழ வேண்டும். இதற்காக தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களாகிய நாம் வெளிநாட்டுத் தூதுவர்களுடன் சந்திக்கும் போதெல்லாம் இதனை வலியுறுத்தியும் வருகின்றோம்.

எமது சொந்த இடத்தில் நாம் வாழ வேண்டுமாக இருந்தால் எமது மண்ணில் நிலை கொண்டுள்ள, ஆக்கிரமித்துள்ள சிங்கள இராணுவத்தை வெளியேற்ற வேண்டியதும், இதற்கான பாரிய போராட்டங்களை நாம் நடத்த வேண்டியதும் அவசியமாகும். இதற்குப் பக்கபலமாக நாங்களும் செயற்படுவோம் எனவும் குறிப்பிட்டார்.

தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் உரையாற்றும்போது;

மனிதாபிமான முறையில் செயற்பட வேண்டிய சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதிலும் கூட சிறிலங்கா பேரினவாதம் பாரபட்சமே காட்டி வருகின்றமையை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். பெயரளவிலேயே அரசாங்கம் சுனாமி அனர்த்த செயற்பாட்டிற்கு இணைந்து செயற்படுவதாகக் கூறுகின்றது. உண்மையில் பேரினவாத வேறுபாட்டிலேயே செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

சுனாமி அனர்த்தத்தைக் கூட அரசியல் இல்லையென்று கூறிக்கொண்டு அரசியல் நடவடிக்கைகளுக்கே பயன்படுத்துகின்றது. இந்த வகையிலேயே ஐ.நா. செயலாளரை வடபகுதிக்கு வராமல் தடை செய்த நிகழ்ச்சியும் ஆகும் என்றார்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவனேசன் உரையாற்றும்போது;

இலங்கை சுதந்திரம் அடைந்த 57 வருட காலத்திலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பல்வேறு துன்ப துயரங்களுக்கும் உள்ளாகிக் கொண்டே வருகின்றோம். சொந்த மண்ணில் நடமாடவும், தொழில் செய்யவும் கூட முடியாத நிலமையே காணப்படுகின்றது.

சிங்கள இராணுவம் எமது வீடுகள், தொழில் செய்யும் நிலங்கள், நடமாடும் பகுதிகள் எல்லாவற்றையும் ஆக்கிரமித்துள்ளிர்கள். இதனால் நாம் பல்வேறு துன்ப துயரங்களுக்கும் முகம் கொடுத்துக்கொண்டும் இருக்கின்றோம். சிங்கள அரசாங்கங்களோ அன்றி சர்வதேச நாடுகளோ கூட இதனைப் பற்றிப் பெரிதாக எதனையும் எமக்குச் செய்ய முன்வரவில்லை என்றார். (41)


## வேலைப் பயிற்சிகள் பற்றிய அறிவித்தல்

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், கீழ் குறிப்பிடப்படும் பயிற்சிகள் இடம் பெறவுள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* தையல் பயிற்சி, ஒருவருட டிப்ளோமா கற்கை நெறி.
* மேசன் வேலைப்பயிற்சி
* தச்சு வேலைப் பயிற்சி

மூன்று பயிற்சி நெறிகளுக்கும் மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும், பயிற்சி முடிவில் தொழில் செய்வதற்கான உப கரணங்களும் வழங்கப்படும். இது தொடர்பான விபரங்களை அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களிடமும். உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

செ.தயானந்தா
பிரதேச செயலர்/உதவி
அரசாங்க அதிபர்,
புதுக்குடியிருப்பு.

(சி.11240)


# தையல் பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கல்

(உடையார்கட்டு)

வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை, இளைஞர் அபிவிருத்திப் பிரிவின் நிதி அனுசரணையுடன் முல்லை. மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முல்லை. மாவட்ட அரசியல் துறையுடன் இணைந்து வள்ளிபுனம் பாடசாலையில் நடத்தப்பட்ட பெண்களுக்கான தையல் பயிற்சியின் நிறைவில் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று 10.00 மணிக்கு வள்ளிபுனம் பாடசாலையில் தேசிய இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர் சி.சண்முகவடிவேல் த்லைமையில் ஆரம்பமானது.

மங்கல விளக்கினை வள்ளிபுனம் பாடசாலை அதிபர் திருமதி. மு.கௌரி, கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஐ.மாதவராசா ஆகியோர் ஏற்றி வைக்க, தேசியக் கொடியை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சதீஸ் ஏற்றி வைத்தார்.

சிறப்புரைகளை அதிபர் மு.ஜெயகௌரி, ஐ.மாதவராசா ஆகியோர் வழங்கினர். அடுத்து தையல் பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (19)

## திருமலை விஜயம்

நோர்வே நாட்டின் அகதிகளுக்கான நிலையப் பிரதிநிதி பென்டா நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார். அவர் அங்கு செல்வநாயகபுரம் பாடசாலை, நிலாவெளிப்பாடசாலை மற்றும் ஸ்ரீமாதுமையம்பாள் பாடசாலை என்பவற்றிற்கு சென்று நிலைமைகளை அவதானித்தார். அத்துடன் இடம் பெயர்ந்தோரையும் சந்தித்தார். சுனாமியின் பின்னர் சேதமேற்பட்டுள்ள பாடசாலைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது குறித்து அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதே இவரின் பயண நோக்கமாகும் இதே-வேளை நேற்று முன்தினம் இவர் மடடக்களப்பிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)


## சாவு அறிவித்தல்

### சதாசிவம் தங்கமலர்

உடுவிலைப் பிறப்பிடமாகவும், ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தங்கமலர் 05-02-2005 நேற்று மாலை காலமாகியுள்ளார். இவர் அமரர் கமலினி, தர்மினிதேவி, மாலினி, நந்தினி (ஜேர்மனி), கருணா தேவி (கனடா), ஆகியோரின் தாயாரும், ஞானசுந்தரம், தங்கசிவம், சவுந்தரம், உதயராசா (ஜேர்மனி), அன்ரன் ரவீந்திரா (கனடா) ஆகியோரின் மாமியாரும், சண்முகசுந்தரம், சுபாஜினி (சுவிஸ்) காண்டீபன் (கனடா), ஜெனார்த்தனன் (கொழும்பு), தர்சிகன், கௌதமன், காயினி (றெட்பானா), ஜெகன் (லண்டன்), கஜேந்திரன் (சாரதி,வெண்புறா), கௌதமன், துஷ்யந்தன் (றெட்பானா) சாதகன், சாதனா), சாரங்கன் (ஜேர்மனி), ரினா,கர்ஜனா, அன்ரன் கீர்த்தனா (கனடா), நந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், அபிசா (லண்டன்) இவரின் பூட்டியாரும் ஆவர். இவரின் நல்லடக்க ஆராதனை றெட்பானா, விசுவமடுவில் 06-02-2005 இன்று பகல் ஒரு மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம். தகவல்:-

மகள் சவுந்தரம்
மாலினி

(5647)



## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் (வ-து)

கைதடி

### கூறுவிலை கோரல்

எமது சங்கத்தால் ஆரம்பிக்கப்படவிருக்கும் எரிபொருள் விற்பனை நிலையக் கட்டடத்திற்குக் கீழ்க்காணும் வேலைகளுக்குக் கூறுவிலை கோரப்படுகின்றது.

(1) கூரை வேலை, கதவு, ஜன்னல் வேலை- இதற்கான மூலப்பொருட்கள் சங்கத்தால் வழங்கப்படும். கூலி ஒப்பந்தத்திற்கு மட்டும் கூறுவிலை கோரப்படுகின்றது.

(2) அலுமினிய இணைப்பிலான கண்ணாடி பொருத்துதல்- இதற்கு மூலப்பொருட்கள் யாவும் ஒப்பந்தக்காரரே கொண்டு வருதல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை தலைமையகத்தில் கடமை நேரத்தில் ரூபா 100/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்தினைத் தபால் உறையினுள் இட்டு, இடது பக்க மேல் மூலையில் எரிபொருள் விற்பனை நிலையக் கட்டடப் பகுதிக்கான கூறுவிலை என்பதனை எழுதித் "தலைவர், தென்.மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி" என விலாசமிட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:-11.02.2005 நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக. கட்டட மாதிரி வரைபடம் தலைமையகத்தில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்

தென். மேற்கு ப. நோ. கூ. சங்கம்
மானிப்பாய் வீதி, கைதடி.

(சி.11314)

# மன்னரின் பேச்சுக்கான அழைப்பை மாவோயிஸ்ட்டுக்கள் ஏற்காவிடின் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

–நேபாள இராணுவத் தளபதி எச்சரிக்கை

(காத்மண்டு)

**மன்னரின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்குத் திரும்பா விட்டால் மாவோயிஸ்ட்டுக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நேபாள இராணுவத் தளபதி பியார் ஜுங் தாபா எச்சரித்துள்ளார்.**

மன்னரின் அழைப்பை ஏற்று மாவோயிஸ்ட்டுக்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும். அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்க வேண்டும். தவறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மாவோயிஸ்ட்டுக்களின் பலத்தைக் குறைத்துப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டால் நேபாள வரலாற்றில் இராணுவத்தின் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

நேபாளத்தில் நெருக்கடி நிலை அமுலுக்கு வந்த பிறகு இராணுவத்துடன் நடந்த மோதலில் ஐந்து மாவோயிஸ்ட்டுக்கள் கொல்லப்பட்டனர். . பல இடங்களில் மாவோயிஸ்ட்டுக்கள் குண்டுகளை வெடிக்கச் செய்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் தாபா ஆட்சி மன்னரால் கலைக்கப்பட்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. ஆட்சிக்கு ஆலோசனை கூற 10 உறுப்பினரைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டு இருக்கிறது. அங்கு சீனப் பாணியில் கம் யூனிஸ்ட் அரசை நிறுவ மாவோயிஸ்ட்டுக்கள் போராடி வருகின்ற னர். 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு இதற்கான வன்முறைக்கு 11 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இல்லாததால் மன்னருடனோ அல்லது அவரது நேரடி பிரதிநிதியுடன் மட்டுமே பேச்சு நடத்துவோம். என மாவோயிஸ்ட்டுக்கள் கூறியுள்ளனர். தற்போது ஷெர் பகதூர் தாபாவின் ஆட்சியை மன்னர் ஞானேந்திரா கலைத்ததற்கு அவர்கள் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை நேபாளத்தில் நேபாளி காங்கிரஸ் சனநாயகக் கட்சியின அலுவலக வளாகத்துக்குள் அதிரடியாக நுழைந்த பொலிசார் கட்சி நிர்வாகிகளைச் சுற்றி வளைத்து சிலரைக் கைது செய் துள்ளனர்.

கட்சியின் தலைமை நிலையத்தில் வெள்ளிக்கிழமை நேபாளி காங்கிரஸ் ஜனநாயகக் கட்சிக் கூட்டம் நடத்தியது. இதில் சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். அப்போது 12 பேர் அடங்கிய இராணுவத் துணைப் படைப் பொலிசார் அங்கு அதிரடியாக நுழைந்தனர். நேபாளத்தில் ஆட்சி அதிகாரத்தை மன்னர் ஞானேந்திரா தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டதை அடுத்து கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளன.

தொலைபேசி, இணையததளம் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.



நேபாள தலைநகர் காத்மண்டுவில் பிரா[illegible]ான இந்து ஆலயத்திற்கு முன்னால் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு[illegible] படையினர்



துருக்கிய தலைநகர் அங்காராவிற்கு அமெரிக்கப் புதிய வெளியுறவுத் துறை அமைச்சர் கொண்டலீசாரைஸ் நேற்று விஜயம் செய்த வேளை துருக்கிய கலக மடக்கும் பொலிசாரின் வாகனமொன்று அங்காராவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பிரதான வாசலுக்கு முன்னால் நிறுத்தப்பட்டுள்ளது.



சர்ச்சைக்குரிய பாதுகாப்பு வேலி அமைக்கும் இஸ்ரேலின் முயற்சியை எதிர்த்து நேற்று முன்தினம் பலஸ்தீன இளைஞர்கள் இஸ்ரேலியப் படையினர் மீது கல் எறிகின்றனர்.

# அமெரிக்காவிற்கு ஈரான் மீது தாக்குதல் நடத்தும் எண்ணம் இல்லை

–அமெ. புதிய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஈரான் மீது தாக்குதல் நடத்தும் எண்ணம் அமெரிக்காவிற்கு இல்லையென அமெரிக்காவின் புதிய வெளிவிவகார அமைச்சர் கொணடலிஸாரைஸ் தெரிவித்துள்ளார்.



புதிய வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸாரைஸ் நேற்று முதல் ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தமது முதலாவது விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

பிரிட்டன், ஜேர்மனி, போலந்து, துருக்கி உட்படப் பல நாடுகளுக்கான விஜயத்தை அவர் மேற்கொண்டுள்ளார். இதன்போது பிரிட்டனுக்குச் சென்ற அவர், செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், ஈரான் மீது தாக்குதல் நடத்தும் எண்ணம் எதுவும் அமெரிக்காவிற்கு இல்லையெனத் தெரிவித்துள்ளார். அதேவேளை ஈரானின் அணுசக்தி நிலையங்களுக்கு எரிபொருளை வழங்கும் நடவடிக்கைகளை மொஸ்கோ கட்டுப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எண்ணப்பட்ட 35 சதவீத வாக்குகளில் ஈராக்கின் ஷியா மு.கூட்டணி முன்னணியில்

ஈராக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.

35 சதவீதமான வாக்குச்சாவடிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஐக்கிய ஈராக்கியக் கூட்டணி என்ற ஷியா முஸ்லிம்களின் கூட்டணி முதலிடத்திலுள்ளமை தெரிய வந்துள்ளது. இடைக்கால பிரதமரின் வேட்பாளர்கள் இரண்டாம் இடத்தில் உள்ளன.

தேர்தல் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், இறுதித் தேர்தல் முடிவுகளை அறிந்துகொள்வதற்கு மேலும் ஆறு நாட்கள் செல்லுமெனத் தெரிவித்துள்ளனர்.



இந்தோனேசியாவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த அரச முஸ்லிம் படையினர் வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர்.

# ஈராக்கிற்கான உணவுக்கு எண்ணெய் விற்பனை திட்டத்தின் தலைவர் லஞ்சம் பெற்றுள்ளார்

- விசாரணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் ஈராக்கிற்கான உணவிற்கு எண்ணெய்யை விற்பனை செய்ய அனுமதிப்பது என்ற திட்டத்தின் தலைவர் பெருமளவில் லஞ்சம் பெற்றதாகவும், தனக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு எண்ணெய் ஒதுக்கீடு செய்ததாகவும், விசாரணையில் தெரியவந்துள்ளது.

குவைத் மீது கடந்த 1990 இல் ஈராக் படை எடுத்தது. இதற்காக ஈராக் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. ஈராக் மக்களின் நலனுக்காக 'உணவுக்கு எண்ணெய் திட்டத்தை ஐ.நா அனுமதித்தது. 1996முதல் 2003 வரை ஐ.நா கண்காணிப்பில் இந்தத் திட்டம் செயற்பட்டது இதற்காக அமைக்கப்பட்ட குழுவுக்கு பெனன் செவன் தலைவராக இருந்தார். இத் திட்டத்தில் முறைகேடுகள் நடந்ததாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

அமெரிக்க பெடரல் வங்கியின் முன்னாள் தலைவர் பால் வோல்கர் தலைமையிலான குழு, இந்த முறைகேடு குறித்து விசாரிக்க அமைக்கப்பட்டது. இக் குழு கடந்த வியாழக்கிழமை இடைக்கால அறிக்கையை அளித்தது. 219 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கைத் திட்டத்தின் தலைவர் மற்றும் பல்வேறு ஐ.நா அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளது.

குறிப்பாக இத் திட்டத்தில் சலுகை காட்ட ஏராளமான பணத்தை லஞ்சமாகப் பெற்றிருப்பதாக பெனன் செவன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்கு வேண்டிய கம்பெனிகளுக்குக் குறைந்த விலையில் எண்ணெய் பங்கீடு செய்ய ஏற்பாடு செய்ததாகவும், பெனன் செவன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை மேலும் தொடர்கிறது. இது இடைக்கால அறிக்கைதான் முழு விசாரணையில் மேலும் பல உண்மைகள் தெரியவரும் என்று வோல்கர் தெரிவித்தார். அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை பெனன் செவன் மறுத்துள்ளார். இந் நிலையில் பெனன் செவன் உட்பட முறைகேடு செய்த அனைத்து ஐ.நா அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் முடிவு செய்துள்ளார்.

# பாக்.சிந்துமாநில முதல்வரின் வீடு நோக்கி கராச்சியில் குண்டு வீச்சு

அடையாளம் தெரியாத சிலர் பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள சிந்து மாநில முதல்வரின் வீட்டை நோக்கி வெடிகுண்டை வீசி விட்டு ஓடி விட்டனர். அது நடை பாதையில் விழுந்து வெடித்தது. இதனால் நடைபாதையில் பெரிய பள்ளம் ஏற்பட்டது. யாரும் இதில் காயம் அடையவில்லை. இந்தப் பகுதியிலேயே அமெரிக்கத் தூதரகமும் அமைந்துள்ளது.

இது நடந்த 45 நிமிடத்துக்குப் பிறகு இன்னொரு குண்டு வெடித்தது. உலக வர்த்தகப் பொருட்காட்சி நடக்கும் இடத்துக்கு வெளியே அந்தக் குண்டு வெடித்தது இதிலும் யாருக்கும் காயமோ, சேதமோ ஏற்படவில்லை.

# சத்துருக்கொண்டானில் சுவிஸ் தமிழ்க் கிராமம்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திறந்து வைப்பு

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுனாமிப் பேரலையினால் பாதிப்பிற்குள்ளான மக்களை மீளக் குடியேற்றும் நோக்குடன் தற்காலிகக் குடியிருப்புக்கான வீடமைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்திற்கமைவாக “சுவீஸ் தமிழ்க் கிராமம் ” என்ற பெயரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3000 குடியிருப்புக்களை அமைக்கும் முயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக்கொண்டான் எனும் இடத்தில் 120 வீடுகளைக் கொண்ட சுவிஸ் தமிழ்க் கிராமம் என்ற முதலாவது குடியிருப்பு திறப்புவிழா கடந்த 2ஆம் திகதி மாலை இடம் பெற்றுள்ளது.*

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் செ.சீசஸ் தலைமையில் இடம் பெற்ற இக் கிராமத் திறப்பு விழாவின் போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.சண்முகம் சம்பிரதாயமான முறையில் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இதனையடுத்து இங்கு நிறுவப்பட்டுள்ள வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தேவராஜன திறந்துவைத்தார். இதனைத் தொடர்ந்து சீசஸ் தலைமையில் பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

இக்கூட்டத்தின் போது அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.அமீரலி உரையாற்றுகையில், மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இரவு பகலாக அயராது உழைத்து உருவாக்கிய இக்கிராமம் மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் என்று குறிப்பிட்டிருந்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்த மகத்தான பணியினை பாராட்டுகின்றேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். தொடர்நதும் அவர்கள் பணி சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இம் மாவட்டத்தில் அரசாங்கத்தின் சார்பாக 1500 வீடுகளை அமைக்கும் போது 500 சதுர அடிக்கு உட்பட்டதாகவே அமைப்பேன் என்பதில் நான் உறுதியாகச் செயற்படுவேன் என்று கூறிய அமைச்சர் அமீரலி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் ஆலோசனையைப் பெற்றே அந்த வீட்டுத் திட்டம் அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார். தமிழத தேசியக கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரன் தமதுரையில், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் 1985 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள சென்னையில் நிர்மாணிக்கப்பட்டது. இந்தக் கழகத்தை நிர்மாணிக்கின்ற போது தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களே முக்கிய பங்காற்றியதுடன், அப்போது ஐம்பதினாயிரம் ரூபா பணத்தினையும் அன்பளிப்பாக வழங்கி இப்பணியை ஆரம்பித்து வைத்தார். அன்றிலிருந்து இப்பணியானது ஆலமரம் போல் விரிவடைந்து இன்று ஒளிமயமாகப் பிரகாசிக்கின்றது. இக்கழகத்தின் பணியானது சர்வதேச நாடுகளிலும் பரவலாக்கப்பட்டு வருவதன் பிரதிபலிப்பே இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சுவிஸ் தமிழ்க் கிராமமாகும். அரசாங்கத்தின் உதவிகளோ எமது மாவட்டத்திற்கு மந்தகதியில் இடம் பெறுகின்றபோது தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமது அர்ப்பணிப்பான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது அனைவருக்கும் முன்னுதாரணமாகும். மேலும் இலங்கை அரசு கோழிக் கூடுகளைப் போன்று வீடுகளை இம் மாவட்டத்தில் அமைப்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் இதை நாங்கள் கூட்டாக அரசிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றும் அரியநேத்திரன் தமதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி கனகசபை, சுவிஸ் பிரஜைகள் குழுத் தலைவர் ஜெயராஜ், அரச அதிபர் சண்முகம், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பி.தயாபரன், வைத்திய அதிகாரி டாக்டர் எம்.தேவராஜன், மாவட்டப் பணிப்பாளர் கு. தேவராஜன் மற்றும் பிரதேச செயலாளர் எம்.சதாசிவம் உட்பட பலர் உரையாற்றியிருந்தனர்.

இக்கிராமத்தில் குடியேற்றப்பட்ட மக்களுக்கு பெறுமதிமிக்க சமையல் உபகரணங்கள், நுளம்பு வலைகள் எனப் பல பொருட்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டதுடன், அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சுவிஸ தமிழ் பிரஜைகளுக்கு விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## நிறுத்தலளவைக் கருவிகளை சரிபார்த்துக் கொள்ளவும்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடுகள் தற்போது தண்ணீரூற்று வருவாய்ப்பகுதி செயலகத்தில் மேற்கொள்ளப் பெற்று வருகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தண்ணீரூற்று வருவாய்ப் பகுதி செயலகத்தில் வைத்து மேற்படி செயற்பாடுகள் இடம் பெறுமெனவும் இக்காலப் பகுதிக்குள் நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் அவற்றிற்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிறுத்தலளவைப் பிரிவு வருவாய்ப் பகுதியினர் வேண்டியுள்ளனர். (சோ)

-முத்துஜயன்கட்டு இடதுகரைப்பகுதியில்-

## நிரந்தரக்கட்டடம் இன்மையால் முன்பள்ளிச்சிறார்கள் பாதிப்பு

முத்துஜயன்கட்டு இடது கரைப்பகுதியில் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் இன்மையால் சிறார்கள் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.

31 முன்பள்ளிச்சிறார்கள் பயிலும் மேற்படி முன்பள்ளிக்கு முன்னர் இருந்த கட்டடம் முற்றாகச் சேதமுற்ற நிலையில் அதனைப் புனரமைப்பு செய்யாத காரணத்தால் அக்கட்டடம் கைவிடப்பட்டுள்ளது. இதனால் கைவிடப்பட்ட வீடொன்றில் முன்பள்ளி தற்காலிகமாக இயங்கிவருகின்ற போதும் மழை, வெய்யில் தாக்கங்களிற்குச் சிறார்கள் உட்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (து)

## பன்னங்கண்டிப்பகுதியில் இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதி பாலத்தினுள் வீழ்ந்தன

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பன்னங்கண்டிப்பகுதியில் இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதி ஒரு உந்துருளியுடன் ஓட்டியும் பாலத்தினுள் விழுந்தார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில், வட்டக்கச்சிப் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த உந்துருளியுடன், கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி நோக்கி வந்துகொண்டிருந்த உந்துருளியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன.

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி நோக்கி சென்ற உந்துருளியுடன் ஓட்டி பன்னங்கண்டி பாலத்தின் நீருனுள் வீழ்ந்தார். உந்துருளியையும் ஓட்டியையும் பாடசாலை மாணவர்களும், அவ்வீதியால் பிரயாணம் செய்த பொது மக்களும் நீரினுள் இறங்கி மீட்டனர். கடந்த புதன கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (12)



தற்போது நடைமுறைக்கு வந்துள்ள வீதிப்போக்குவரத்து திருத்தச் சட்டம் குறித்து தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்து பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் நேற்று முன்தினம் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள ஆங்கிலக் கல்வி நிலையத்தில் விளக்க கருத்துரை வழங்கு வதனைப்படத்தில் காணலாம். (படம்: சோதி)

# பெப்ரவரி-5 முதல் நடைமுறைக்கு வந்துள்ள தமிழீழ வீதிப்போக்குவரத்து திருத்தச் சட்டம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழத்தில் வீதிப்போக்குவரவுகளை ஒழுங்குபடுத்தி வீதி விபத்துக்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் தமிழீழத் தேசியத் தலைவரின் ஒப்புகையுடன் தமிழீழ சட்டவாக்கச் செயலகத்தினால்தமிழீழ வீதிப்போக்குவரத்து திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு திருத்தவிதிகள் நேற்று முதல் அமுலாக்கப் பெற்றுள்ளது.

01.தமிழீழத்தின் வீதிப் போக்குவரவுகளை ஒழுங்கு படுத்தி வீதிவிபத்துக்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் தமிழீழத்தேசியத்தலைவரின் ஒப்புகையுடன் தமிழீழ சட்டவாக்கச் செயலகத்தினால் இத் திருத்தவிதிகள் பிரகடனப் படுத்தப்படுகிறது.

02. இது தமிழீழ வீதிப்போக்குவரத்து விதிகளின் பிரிவு 12 இன் மீதான திருத்தம் செய்யப்பட்ட விதிகள் எனவோ, 2005ஆம்ஆண்டின் 01 ஆம் எண் விதிகள் எனவோ எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இச் சட்டம் 2005 ஆம் ஆண்டு 2ஆம் மாதம் 5ஆம் நாள் முதல் செயற்படுத்தப்படும்.

03.தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் இவ் வீதி ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்பதுடன் அதற்காக தமிழீழ வீதிப்போக்குவரத்துப் பிரிவினை நிறுவி அதனூடாக இவ் விதிகளை நடைமுறைப்படுத்துவார்.

04. காலத்துக்குக் காலம் இவ்வொழுங்கு விதிகளில் புதிய பிரிவுகளைச் சேர்ப்பதற்கும் நீக்குவதற்கும் அல்லது சில பிரிவுகளை இடைநிறுத்துவதற்கும் காவல்துறைப் பொறுப்பாளர் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

05.இவ்வொழுங்கு விதிகள் அனைத்து வாகனங் களுக்கும் பொருந்தும் என்பதுடன் இவ்விதிகளின் வலி துடமை பற்றி எத்தகைய மன்றிலும் கேள்விக்குட்படுத்த முடியாது என்பதுடன் உரிய இடத்தில் வைத்துத் தீர்மானிக் கப்படும் தண்டப்பணம் பற்றிய தவறுகள் தவிர ஏனைய வற்றினை விசாரிக்கும் அதிகாரம் மாவட்ட மன்றுகளுக்கே உரித்தாகும்.

06.தமிழீழ சட்டக்கோவையின் 38 ஆம் பக்கத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதிப்போக்குவரத்து விதிகளின் 12 ஆம் பிரிவு கீழ்க்காணும் வகையில் திருத்தப்படுகின்றது என்பதுடன் அதன் பிரகாரம் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறுவோர்மீது கீழ் அட்டவணையில் குறிப்பிட்ட தொகைக்கு மேற்படாத குற்றக் காசிறுப்பை தீர்மானித்து அறவிடும் அதிகாரம் வீதிப்போக்குவரத்துக் காவல்துறை அலுவலருக்கு இச் சட்டத்தால் வழங்கப்படுகிறது.

01.மதுபோதையில் வாகனம் செலுத்துதல். ரூபா-2000.00

**02.அளவுக்குஅதிகமான வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல்.**

**i.40 கி.மீக்கு அதிகமான வேகத்தில் செலுத்தக் கூடாதென பணிக்கப்பட்ட இடங்களில்.**

அ) 40 கி.மீக்கும் 50 கி.மீக்கும் இடைப்பட்டவேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல். ரூபா-500.00

ஆ) 50 கி.மீக்கும் 60 கி.மீக்கும் இடைப்பட்ட வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல். ரூபா-600.00

இ.60 கி.மீக்கும் அதிகமான வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் (மன்றின் நடவடிக்கைக்கு)

**ii) 60கி.மீக்கு அதிகமானவேகத்தில் செலுத்தக் கூடாதென பணிக்கப்பட்டஇடங்களில்**

அ) 60 கி.மீக்கும் 70 கி.மீக்கும் இடைப்பட்டவேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல். ரூபா.750.00

ஆ) 70 கி.மீக்கும் 80 கி.மீக்கும் இடைப்பட்ட வேகத்தில் வாகனத்தை செலுத்துதல் ரூபா-1000.00

இ.80 கி.மீக்கு அதிகமான வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல் (மன்று நடவடிக்கை)

03.அபாய எச்சரிக்கை வாகனங்களைப் புறக்கணித்தல். ரூபா.250.00

04. போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்களை வீதியில் செலுத்துதல் அல்லது நிறுத்துதல். ரூபா-250.00

05.பின்னால் வரும் வாகனங்களுக்கு வழிவிடாது பாதையின் நடு வீதியால் வாகனத்தைச் செலுத்துதல். ரூபா-250.00

06.இரவு வேளைகளில் வாகனத்தை வீதியில் நிறுத்தியிருக்கும் போது அபாயவிளக்கு எரியப்படாது விடில். ரூபா.500.00

07.வாகனத்தை விட நீளமான அல்லது அகலமான பொருட்களை வாகனத்தில் ஏற்றிச் செல்லும் போது சிவப்பு நிற அபாய எச்சரிக்கைக் கொடியை பறக்க விடப்படாவிடில், இரவில் இவ்வாறு செல்லும் போது சிவப்பு நிற வெளிச்சம் போடப்பட்டிருக்காவிடின் ரூபா.500.00

**08.வாகன இலக்கத்தகடு பொருத்தாமல் வாகனத்தைச் செலுத்துதல்.**

i.வாகன இலக்கத்தகடுகளில் ஏதாவது ஒன்றினையோ அல்லது இரண்டையுமோ இல்லாது செலுத்துதல் ரூபா. 300.00

ii.வாகனத்தில் பொருத்தப்பட்ட இலக்கத்தகடுகள் தெளிவின்றி காணப்பட்டமை. ரூபா.200.00

09.வாகனத்தை நிறுத்தும் படி காவலர் சைகை காட்டிய போது வாகனத்தை நிறுத்தாது செலுத்துதல். ரூபா.500.00

10.இரவு வேளைகளில் வெளிச்சமின்றி வாகனம் செலுத்துதல். ரூபா.1000.00

அ) ஒரு பக்கம் வெளிச்சமின்றி வாகனம் செலுத்துதல் ரூபா.500.00

ஆ) உந்துருளி வெளிச்சமின்றி செலுத்துதல் ரூபா.350.00

இ) ஈருருளி வெளிச்சமின்றி செலுத்துதல். ரூபா.50.00

ஈ) மங்கிய வெளிச்சம் போடாமல் வாகனம் செலுத்துதல் (டிம்) ரூபா-250.00

11.தடைசெய்யப்பட்ட பாதையால் அல்லது வழமைக்கு மாறான பக்கத்தினால் வாகனத்தைச் செலுத்துதல் ரூபா.250.00

12.வாகனத்தில் மேலதிகமான வழிச்செல்லுனர்களை ஏற்றிச்சென்றமைக்கு (பின்கதவில், மேல் கூடாரத்தில், மிதி பலகையில்) ரூபா.350.00

13.இருபக்க பார்வைக்கண்ணாடிகள் இன்றி வாக னத்தைச் செலுத்தியமை (ஒன்று அல்லது இரண்டு) ரூபா. 350.00

14. ஈருருளியில் சமாந்தரமாக (பக்கம்பக்கமாக ) ஓட்டிச் செல்லுதல் ரூபா.50.00

15.உழவு இயந்திரத்தில் ஆட்கள் இருப்பதற்கென பாதுகாப்பாக அமைக்கப்பட்ட ஆசனங்கள் அற்ற பகுதிகளில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல் ரூபா.250.00

அ) கலப்பை, சுழல்கலப்பை போன்றவற்றைப் பூட்டி நெடுஞ்சாலையில்செலுத்துதல் ரூபா.250.00

16. ஏனையவைகள் ரூபா.250.00 (சோ)

# திருமலை பொதுவைத்திய சாலை கட்டடச் சுவரில் வெடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை பொது வைத்தியசாலையின் கடலோரக் கட்டடம் ஒன்று வெடிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதில் நோயாளர்களைத் தங்க வைத்து சிகிச்சை வழங்குவது ஆபத்தான காரியமாகும். இக்கட்டடத்திற்குப் பதிலாக வேறொரு கட்டிடம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு திருகோணமலையின் பிரதி மாகாண சுகாதார சேவைகள் புணிப்பாளர் டாக்டர் ஏபிரகாம் நேற்றுமுன்தினம்வெள்ளிக்கிழமை திருகோணமலை கச்சேரியில் நடைபெற்ற சுனாமி அனர்த்தக் கூட்டத்தில் அமைச்சர்களுக்குத் தெளிவுபடுத்தினார். கடற்கோள் அனர்த்தத்தில் இந்த வைத்தியசாலையில் தடுப்புச்சுவர் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள தாகவும், கிண்ணியா வைத்திய சாலை முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், குச்சவெளி வைத்தியசாலைப் பகுதி சேதமடைந்ததாகவும் தெரிவித்தார்.

திருகோணமலையில் அனர்த்தத்தின் போது நோயாளர்களை வைத்துப் பராமரிப்பதற்கு வேண்டிய சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியதோடு, தற்போது பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கென சுகாதாரக் குழுக்கள் செல்வதாகவும் இவர்களால் சுகாதாரத்துறைக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருப்ப தாகவும் குறிப்பிட்டார்.

# தென்மராட்சியில் மக்கள்மீதான படையினரின் அடாவடிகுறித்தும் படையினரின் குற்றச்சாட்டு குறித்தும் க.கா. குழு கலந்துரையால்

(தென்மராட்சி)

**மிருசுவிலில் சிறிலங்காப் படையினர் வாகனத்தால் மோதி கொலை செய்யப்பட்டபொதுமகன் தொடர்பாய் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக்குழு கலந்துரையாடல் நடத்தியுள்ளது.**

மிருசுவிலில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னால் பொது மகன் ஒருவரை சிறிலங்காப் படையினர் வாகனத்தால் மோதி கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கொடிகாமத்தில் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டத்தை அடக்க சிறிலங்காப் படைகள் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முற்பட்ட வேளை இரண்டு படையினர் தாக்கப்பட்டதற்கு புலிகளே பின்னணி என படைத்தரப்பு மற்றும் பொலிசார் கூறிய குற்றச்சாட்டுக் குறித்தே போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அதிகாரிகள், கொடிகாமம் பிரதேச அரசியல்துறை பணிமனையில் பிரதேசப் பொறுப்பாளருடன் கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்பு குழு அதிகாரிகளுக்கு இப் பிரதேசத்தில் படையினர் தொடர்ந்து புரிந்து வரும் அட்டூழியங்கள் குறித்தும், வாகனத்தால் மோதி கொலைசெய்யும் புதிய வழிமுறைகளை படையினர் சமாதான காலத்தில் பின் பற்றி வருவது குறித்தும் பொதுமக்களின் நியாயமான போராட்டங்களில் படையினர் ஆயுதங்களுடன் பிரசன்னமாவதும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்தும் மக்கள் மீது வன்முறைகளை பிரயோகிப்பது குறித்தும் தக்க ஆதாரங்களுடன் கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ரத்தினம் அவர்கள் விளக்கம் அளித்ததாக தெரியவருகிறது. (28)

# த.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்குழு 3நாள் விஜயமாக மட்டு. அம்பாறை சென்றது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு தற்போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு சென்றுள்ளது.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் க.துரைரட்ணசிங்கம் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார்கள். நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிட்ட இவர்கள், இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களையும் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.திருகோணமலையிலிருந்து வாகரை ஊடாகவே இவர்கள் மட்டக்களப்பு சென்றடைந்துள்ளனர். இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டம் கோட்டைக் கல்லாறு கிராமத்தில் நிவாரணக் கொடுப்பனவுகளில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தி கிராம சேவை அலுவலகர்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மின்சாரம் வழங்கப்படாமை குறித்து ஏமாற்றப்படுகிறோம் உடன் இணைப்பு வழங்காவிடின் போராட்டம் நடத்துவோம்

**- மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட மக்கள் எச்சரிக்கை**

(தென்மராட்சி)

மீளக்குடியமர்ந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்ட போதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படாமை குறித்து மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட மக்கள் விசனம்,தெரிவித்துள்ளதோடு போராட்டம் நடத்தவும் தீர்மானித்துள்ளனர்.

மீளக்குடியமர்ந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் இதுவரை மின்சாரம் வழங்கப்படாமை குறித்துபடித்தமகளிர் குடியேற்றத்திட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது குறித்து கடந்த காலத்தில் யாழ் அரசாங்க அதிபர், தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர், சாவகச்சேரி மின்சாரசபை அத்தியட்சகர் யாழ்.மின் அத்தியட்சகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பல தடவைகள் மகஜர் வழங்கியும், உடனடியாக இதைச் செய்து தருகின்றோம் நிதியும். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறுகிறார்களே ஒழிய இதுவரை ஒரு மின்கம்பமேனும் நாட்டப்படவில்லை என்றும் படைப்பிரசன்னம் அதிகமுள்ள இப்பிரதேசத்திற்கு உடனடியாக மின் இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கும் படியும் 1990ஆம் ஆண்டுக்கு முன்னால் மின்சார வசதிகளுடன் இருந்த இப்பகுதிகள் இன்று புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எதனையும் எடுக்க வில்லை என்றால் மின்சாரசபை அலுவலகம் முன்னால் மக்கள் போராட்டம் நடத்தும் நிலை உருவாகும் ஏனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

# சுனாமியின் பின்னான தங்கள் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளை முற்றாகத் தொலைத்துவிடும்

**-கிளி.அரச.சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சனாதிபதிக்கு மகஜர்**

தமிழ் மக்கள் மீதான இராணுவ கெடுபிடிகளும் சுனாமி பேரழிவின் பின்னான தங்கள் அரசின் புறக்கணிப்பு நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் சமாதான முயற்சிகளை மிக எட்ட முடியாத தொலைவிற்கு தொலைத்து விடுபவையாகவே உள்ளன. இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு ஆண்டுகள் நிறைவுற்று மூன்றாவது ஆண்டை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கும் வேளையில், தங்கள் தலைமையின் கீழ் இயங்கும் ஆயுதப்படையினருடைய நாளாந்த அமைதி குலைக்கும் நடவடிக்கைகளினால் சமாதானத்தின் தொடர் நடவடிக்கைகள் பாதிக்கப்படுமோ என அஞ்சுகின்றபடியாலும், சுனாமி அனர்த்த நிதி பங்கீடு சரியாக இல்லை என்பதாலும் இக்கடிதத்தினை தங்களுக்கு எழுதுகின்றோம்.

தங்களின் தலைமையின் கீழ் இயங்கும் ஆயுதப் படையினர்கள் போர்க்காலங்களில் ஆகாயத் தாக்குதல், கடல் வழித்தாக்குதல், தரைவழித்தாக்குதல் போன்றவற்றினால் எங்கள் வாழ்விடங்கள், இருப்பிடங்களை அழித்து எங்களை அகதி வாழ்வுக்கு தள்ளினார்கள். எங்கள் பிள்ளைகளின் கல்வியும் சுகாதாரமும் மிகமோசமாகப் பாதிக்கவைத்தார்கள்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வாழ்கின்ற தமிழ் மக்களைக் கைது செய்தல், கொலை செய்தல், பொருட்களைச் சூறையாடுதல், பாலியல் வல்லுறவு, காயப்படுத்தல், மாணவர்கள், இளைஞர்களைத் தாக்குதல் போன்றவற்றையெல்லாம் செய்து முடித்தார்கள்.சமாதான ஒப்பந்தத்தின் பின்பு இவை இல்லாது போகுமென நம்பியிருந்தோம். ஆனால் தமிழ் மக்கள் கொண்டாடுகின்ற தமிழ்த்தேசிய இனத்தின் விழாக்களின் போது அந்த விழாக்களைக் குழப்புவது, விழாக்களை ஒழுங்கு செய்பவர்களைத் தாக்குவதும், அடிப்பதும், கைது செய்வதும், கண்ணீர்ப்புகைக்குண்டுகள் வீசுவதும் எமது தேசியக் கொடியினை ஏற்றவிடாது தடுப்பதும் பிடுங்கி ஏறிவதும், கடற்பகுதிகளில் மீனவர்களைத் தாக்குவதும், மீன்பிடிப்பவர்களை அச்சுறுத்துவதும், தங்கள் சோதனைச் சாவடிகளைக் கடக்கின்ற மக்களை மோசமாகச் சோதனை செய்வதும், விடுதலைப்புலி உறுப்பினர்கள் பிரயாணம் செய்யும் போது அவர்களை இம்சைப்படுத்துவதும், நாகரிகமற்ற முறையில் சோதனை செய்ய முற்படுவதும் சமாதானத்திற்கான ஒரு சமிக்கைகளாக எமக்குத் தெரியவில்லை. நடந்து வரும் இராணுவ, அரச அட்டகாசங்களைப் பின்வருமாறு தங்களின்கவனத்திற்குத் தருகின்றோம்

சிறிலங்கா அரசினதும், இந்திய அரசினதும் வஞ்சத்தினால் கொல்லப்பட்ட கேணல் கிட்டு அவர்களும் அவரோடு இணைந்த ஒன்பது போராளிகளினதும் 12 ஆம் ஆண்டு நினைவு தினம் 16-01-2005 தமிழீழப் பிரதேசமெங்கும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. மன்னார் மாவட்டத்திலும் இந்நிகழ்வைக் கொண்டாடிய மக்களை மன்னார் நகரத்தில் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றவிடாது தடுத்து இந்நிகழ்வையும் குழப்பி தங்கள் படையினர் அடாவடித்தனம் புரிந்துள்ளார்கள். இதுபோலவே பேசாலைப் பகுதியில் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி நிகழ்வினைக்குழப்பியதோடு கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் வீசி மிகக் கேவலமாக தங்கள் ஆயுதப் படையினர் நடந்து கொண்டார்கள்.

இவ்விடயமாக மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் அவர்களால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எழுதிய கடிதத்தைப் பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டோம் என்பதை தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அது போலவே தென்மராட்சிப் பகுதியில் படையினரின் ரோந்து நடவடிக்கைகளின் போது பொது மக்களை அச்சுறுத்தும் சம்பவங்களும் பொது மக்களுக்குப் பெரும் இடையூறு விளைவிப்பதாக பொது மக்கள் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளதையும் தங்களுடைய கவனத்திற்குத் தருகின்றோம். இது போலவே படையினர் வாகனங்களை வேகமாக ஓட்டி மக்களை முட்டி மரணிக்கச் செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகிறது. கொடிகாமத்தில் நடைபெற்ற படையினரின் நடவடிக்கைகள் மிக மோசமானவையாகும். சமாதான ஒப்பந்த நிலையை வைத்துக் கொண்டு மெதுமெதுவாக எங்களை அழிப்பதையும் எங்கள் இயல்பு வாழ்க்கை நடவடிக்கைகளைச் சின்னாபின்னாமாக்குவதையுமே உங்கள் ஆயுதப் படையின் செயற்பாடுகள் வெளிக்காட்டி நிற்கின்றன. விரைவாக ஆயுதப்படைகளின் அட்டகாசங்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க இணையம் கோருகிறது.

'சுனாமி' கடல் இயற்கை அனர்த்தத்தினால் துன்பப்படுகின்ற இந்தக் கஸ்ரமான நேரத்திலும் இராணுவத்தினுடைய இந்தச் செயற்பாடுகள் எமக்குப் பெரும் வேதனையை உண்டுபண்ணுவதுடன் சமாதானத்தின் எதிரிகளாக உங்களை நாம் பார்க்கும் தன்மைக்கு மெதுமெதுவாகத் தள்ளப்படுகின்றோம்.

'சுனாமி' அனர்த்தம் தொடங்கி 26 நாட்கள் முடியும் வேளையிலும் தமிழ் பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முழுமையான உதவிகளை தங்கள் அரசு இன்னும் அனுப்பிவைக்கவில்லை. எமது மக்களுக்கு உதவுவதற்காக தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற உதவிகள் அனைத்தும் அரச பதுக்கலாக உள்ளதேயொழிய அவை வெளிக்காட்டல் மூலம் எமது பகுதிகளுக்கு இன்னும் பகிர்ந்தளிக்கப்படாமல் உள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பிரதேசங்களில் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புக்களின் முழுச் சுமையையும் தமிழீழ விடுதலைப்புலிகளும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் தலைமை ஸ்தாபனமாக இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமுமே ஏற்றுக்கொண்டது அத்துடன் அது மிக வேகமாக உரிய திட்டங்களையும் சுனாமி அனர்த்தச் செயலணிக்குழுவையும் உருவாக்கி அதன் மூலம் நிறைந்த செயற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். விடுதலைப்புலிகளின் பெரும் ஆளணி உதவியுடன் உடனடியாகவே மீட்பூப் பணியையும் பிரேத அடக்கங்களையும் தேடுதல் நடவடிக்கைகளையும், இடம் பெயர்ந்த மக்களுக்கான உதவிகளையும், சுகாதார நடவடிக்கைகளையும், தற்காலிக இல்லிட வசதிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளையும் மிக மிக நேர்த்தியான முறையில் செயற்படுத்திவருகின்றோம். எமது பணிகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் பார்வையிட்டு திருப்தி தெரிவித்துள்ளதை தங்களின் கவனத்திற்குத் தருகின்றோம். 14 நகரங்களை மீளமைக்க நடவடிக்கை அறிவித்துள்ளீர்கள். இம்மீள் நிர்மாணப் பணிகளில் வடக்குப் பகுதியைத் தாங்கள் முற்றாகப் புறக்கணித்த தங்களின் நடவடிக்கைகள் தங்களின் உள்மனச் செயற்பாட்டில் இந் நாட்டில் தமிழர்களை நிம்மதியாக வாழ விடக்கூடாது என்பதையே காட்டுவதாக அமைகிறது. சுனாமி நிவாரணப்பணத்தின்மூலம் யுத்தம் ஒன்றை எம்மீது திணிக்கவும் எம் இனத்தை அழிக்கவும், தாங்களும் தங்கள் அரச படைகளும் முயன்று சமாதான தளத்தை உடைத்துவிடுவீர்களோ என்ற அச்சமும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்குத் தோன்றியுள்ளது.

ஆகவே குறுக்குவழிகள், சந்தேகங்கள் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, உடன் பொருள் உதவிகள், பண உதவிகள், நிரந்தர கட்டுமான வேலைகளுக்கான உதவிகள் அனைத்தையும் நேரடியாக எமது பகுதிக்கு எங்கள் செயலணி மூலம் தாங்கள் அனுப்ப நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென எமது இணையம் கோருகின்றது. இதேநேரத்தில் அவசரகால நிலையைப் பிறப்பித்துள்ளீர்கள். இந் நடவடிக்கையானது மெது மெதுவாக ஓர் யுத்தத்திற்கான தயாரிப்புச் செயற்பாடாகவே படையினர் பயன்படுத்துவர் மேலும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களும் இச் சட்டத்தால் பல தாக்கங்களுக்கு உள்ளாகுவர். இச்சட்டத்தை உடன் வாபஸ்பெற நடவடிக்கை எடுக்கவேண்டுமென இணையம் கோருகின்றது.

ஆகவே சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் அனைத்தையும் சரியான பங்கீடுகள் எமது பகுதிக்கு மிக விரைவாக அனுப்பி வைக்க இணையம் கோருகிறது. அத்தோடு தமிழர் வாழும் பிரதேசங்களில் இராணுவ முப்படைகளின் அட்டகாசங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள், தமிழர்கள் தங்கள் தேசியக்கொடியினை ஏற்றவும் நினைவுதினங்களை நிறைவாகக் கொண்டாடவும் தடைபோடாதீர்கள், சமாதான ஒப்பந்தத்தைச் சரியாக இயக்குங்கள், சமாதானத்தின் பெயரால் எமது விடுதலையினைக்கொச்சைப்படுத்தவும், பிளவுகளை ஏற்படுத்தவும் எடுக்கும் எல்லா முயற்சிகளும் சமாதானத்தை மிகத் தொலைவில் எட்டமுடியாத அளவிற்குத் தொலைத்துவிடும் என்பதையும் தங்களுக்கு இறுகிக் கருத்தாக வைத்து நிறைவு செய்கின்றோம். (சா)

# மக்களுக்கான நிவாரணத்தை விட அரசியலையே முதன்மைப்படுத்தும் இலங்கை ஆட்சியாளர்

சுனாமி அனர்த்தம் காரணமாக இந்நாட்டில் பல்லாயிரம் பேர் பலியானதுடன் பல கோடிக்கணக்கான சொத்துக்களும் இழக்கப்பட்டுள்ளன.இவ்வனர்த்தம் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களில் மிக மோசமானதுடன் அது மிக்க கவலையளிக்கக் கூடியதாகவும் உள்ளது. அதனால் ஏற்பட்ட களைப்பு இன்னும் மாறவில்லை.

இந்தக் கவலையிலிருந்து எவ்வாறு மீள்வது என மக்களும், அரசும் ஒன்று பட்டு சிந்தித்து செயற்படவேண்டும்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விசேட கவனம் செலுத்த வேண்டும் அப்பிரதேசத்தை மீண்டும் அதே போன்று அமைப்பதில் ஒரு நன்மையும் கிடையாது இந்தப் பிரதேசங்களை 30, 40 வருடங்களுக்கு பொருத்தமான விதத்தில் அபிவிருத்தி செய்யவேண்டும். இந்நாட்டுக்கு கிடைக்கப்படும் நிவாரண நிதிகளைக் கொண்டு கண் துடைப்பு பணிகள் போன்று செய்யாது நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் அபிவிருத்திகளை முன்னெடுப்பது நன்று.



புனரமைப்புப் பணிகளில் ஈடுபட முன்பு அந்தந்தத துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனைகளைப் பெறல் வேண்டும். உதாரணமாக ரயில் சேவை (ரயில் பாதை).

இதன் போது உள்நாட்டு நிபுணர்களுடன் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியும் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு முன்பு அதற்கான சரியான வரைவிலக்கணத்தை தயாரிக்க வேண்டும். அதற்கு குழு ஒன்று அமைப்பது நன்று. அவ்வாறு அமைக்கப்படும் குழுவிலும் பல குறைபாடுகள் காணப்படலாம். அதனை சுட்டிக் காட்டி சரியான வழியை காட்டுவதற்கு ஏற்ற பொதுமக்கள் அமைப்பு இருக்க வேண்டும் அது தவறுகளை சுட்டிக்காட்டும் துணிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்த நாடு கட்டி எழுப்பப்பட்ட 50 ஆண்டு கால வரலாற்றை நோக்குவோமாயின் அது முழுக்க முழுக்க அரசியல் மயப்பட்டதாகவே தெரிகின்றது. அரசியல் கலப்பற்ற பொதுமக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடியவில்லை. தற்போதைய சுனாமி பாதிக்கப்பட்ட விவகாரத்தையும் அரசு அவ்வாறே கையாள முற்படுகிறது. நிவாரணத்தைவிட தமது அரசியலையே தான் மையப்படுத்துகின்றது. எனவே பொது மக்கள் அமைப்பு ஒன்று இருப்பின் நாடு அரசியல்வாதிகளின் தவறான பாதையில் செல்வதை சுட்டிக்காட்ட முடியும் தற்போதைய அரசும் இது வரை தனக்குத் தேவையான விதத்தில் நடவடிக் கைகளில் ஈடுபடக் காரணம் குறைகளை சுட்டிக்காட்ட பொது மக்கள் அமைப்பொன்று இல்லாமையே.

அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதனை மக்கள் பார்த்து கைகட்டிக் கொண்டு நிற்கும் நிலையே தற்போதுள்ளது. அதிலிருந்து மீள வாய்ப்பு ஏற்பட்டிருப்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் பொது அமைப்புகள் இந்த சக்தியையும் உரிமையையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தமது அபிப்பிராயங்களையும் எதிர்ப்புக்களையும் முன் வைக்க முடியும். அவ்வாறு பொது அமைப்புக்கள் உருவாக்காது விட்டால் முன்னைய வழிகளையே அரசு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும். சுனாமி அனர்த்தம் மூலம் இந்தமாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

நாட்டைக் கட்டி யெழுப்பக் கிடைத்துள்ள அந்த அரிய சந்தர்ப்பத்தில் மக்கள் அமைப்புக்கள் தற்போது மௌனமாகியிருந்தால் தொடர்ந்தும் மௌனமாக இருக்கும் நிலையே ஏற்படும். அதிகமான பொறுப்புக்களை இவ்வாறான அமைப்புக்களும் கொண்டிருக்க வேண்டும் என்பதை மறக்கக் கூடாது. இதன் மூலம் புனரமைப்புப் பணிகளை புதிய வழிகளில் கொண்டு செல்ல முடியும். நாட்டுக்குத் தேவையாயிருப்பதும் அதுவே. அதன் மூலம் நிரந்தரமான அபிவிருத்திக்கு அத்திவாரமிட முடியும்.



அதன் பின்னரே எடுக்கப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளை திட்டமிடலாம். திட்டமிடுதல் தேசிய திட்டமிடுதலுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும். உதாரணமாக பாடசாலைகளை அமைப்பதில் இந்த தேசிய திட்டமிடலின் மூலம் உலக நாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெறமுடியும். அவ்வாறு நிதி உதவிகள் கிடைக்கும் போது நடைமுறைப்படுத்தும் பிரிவினரிடம் கையளிக்கவேண்டும். இதன் மூலமே தேவையானதை சரியான முறையில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

ஆயினும் தற்போது பாராளுமன்றம் என்றால் என்ன?அதன் நடவடிக்கைகள் என்ன?என்பது பற்றி பிரச்சினைகள் தோன்றுகின்றன. பாராளுமன்றத்திடமும் பாரிய பொறுப்புக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அனைத்து நடவடிக்கைகளுக்காவும் பாராளுமன்றம் கூடும் போது தவறாது சமுகமளித்து ஆதரவு வழங்க வேண்டும். எனினும் ஏதோ ஒரு காரணத்தினால் பாராளுமன்றம் கூடுவது ஒரு மாத காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. குறைந்தது அடுத்த பாராளுமன்றம் கூடும் போதாவது திட்டமிட்டவாறு அடுத்த நடவடிக்கை பற்றிச் சிந்திக்க வேண்டும். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவே, எல்லாவற்றுக்கும் முதல் மக்களின் கோரிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத யாரும் இந்த நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது. பாராளுமன்றத்தை ஒத்திவைக்காது விரைவாக தேவையான திட்டங்களை வகுத்து செயற்பட்டால் அவர்களின் நடவடிக்கைகளை மக்கள் மதிப்பர். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கவென பல வெளிநாட்டுப் பொருட்கள் வந்து சேர்ந்தன. அவை இந்நாட்டில் இல்லாதவையல்ல. வெளிநாட்டவர் அனுப்பியது அவர்களுக்குத் தேவையன்றி இந்நாட்டு மக்களுக்குத் தேவையானவையல்ல. ஆயினும் தேவையானவை பற்றித் திட்டமிட்டு அறிவிககாமையே இதற்குக் காரணமாகும். எமக்கு என்ன தேவை என்பதை இப்போதாவது அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

அமெரிக்காவின் தற்போதைய சனாதிபதியும் முன்னாள் சனாதிபதி இருவரும் அமெரிக்காவிலுள்ள இலங்கைத்தூதரகத்துக்கு விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு என்ன வகையான உதவிகள் தேவைப்படுகிறதுஎனக் கேட்டுள்ளனர். இது வரலாற்றில் நிகழாத சம்பவமாகும். ஆனால் அந்தத் தூதரகத்தில் எமது நாட்டின் தேசப்படம்கூட இருந்ததா என்பது ஐயமே.

சமிந்த முனசிங்க
(லங்காதீப)
மொழியாக்கம் வடிவேல்

இதன் மூலம் இந்நாட்டில் உள்ளோர் திட்டமிட்டு எதனையும் எப்போதும் செய்வதில்லை என்பதும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு செயற்படுவதும் தெரியவருகிறது.

ஆகவேஒருபோதும் ஒத்துழைப்புடன் செயற்படாது இருந்த மக்கள் இந்த அனர்த்தத்தின் பின் ஒத்துழைப்புடன் செயற்படுவது தற்போதைய அரசியல்வாதிகளைப் பின் தள்ளும ஒருநடவடிக்கைஎனக் கருதலாம்.

## வீதி விபத்துக்களைத் தவிர்க்க காவல்துறையின் கருத்தூட்டல்

(அலுவலக செய்தியாளர்)

வீதிப் போக்கு வரத்து தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு ஒன்றினை ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்கு வரத்து பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமாரன் நடாத்தியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை 2.45மணியாளவில் நடைபெற்ற மேற்படி கருத்தூட்டல் நிகழ்வில் அந்நிறுவனத்தில் பணிபுரியும் 80 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்குபற்றினர். இக்கருத்தூட்டல் நிகழ்வில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களை இனம் கண்டு அவற்றை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம் என்பது பற்றிய விளக்கங்களை சிவகுமாரன் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

மற்றும் பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் வீதி நடைமுறைகளை எவ்வாறு பின்பற்றுவது என்பது தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது. அத்தோடு கடந்த காலத்தில் ஏற்பட்ட விபத்துகள் தொடர்பான புகைப்படங்களை நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பார்வையிட்டனர்.

தொடர்ந்து இவ்வாறான கருத்தூட்டல் நிகழ்வுகள் முக்கிய இடங்களில் நடாத்தபட்டு வருவதனால் அதிகளவான விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (கு.ச)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் அடம்பன் பிள்ளையார் பிட்டியை-சேர்ந்த செங்கோல் அன்ரன் மிசியாஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 733643919-V )புளியங்குளம் சோதனைச் சாவடிக்கு அருகாமையிலிருந்து கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (சோ)

## 'விழி' வெளிவந்துவிட்டது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையினரால் வெளியிடப்பெற்று வரும்மாதாந்தமருத்துவ இதழ் "விழி" வெளிவந்துள்ளது. உயிர்ச்சத்து 'ஏ' குறைபாடு பற்றி நாம் விழிப்படைவோம் எனும் தலைப்புச் செய்தியுடன்,உலகஆண்டுக் கணக்கெடுப்பு,புகைப்பிடித்தல் உடல் நலத்திற்கு கேடாகலாம், மனைவியின் சுமைகளுக்கு தோள் கொடுங்கள் மற்றும் இன்னும் பல சுகாதாரச் செய்திகளைத் தாங்கி பெப்ரவரிமாத மருத்துவஇதழ்"விழி " 53 வெளிவந்துள்ளது. (சோ)

## இன்று பொதுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய வருடாந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கப்பொதுக் கூட்டம் இன்றுபிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்திற்கு அனைத்துப்பெற்றோர்களையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் வேண்டியுள்ளார். (சோ)

## முள்ளியவளை நலன்புரிநிலைய மக்களுக்கு மன்னார் மக்கள் பால்மா வழங்கினர்

### தற்காலிக குடிசைகள் அமைக்க உதவவும் முடிவு

(மன்னார்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் முல்லைத்தீவில் பாதிப்புக்குள்ளாகி முள்ளியவளை நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களுக்கு மன்னார் பிரஜைகள் குழுவினர் பால்மா வகைகளை வழங்கியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இம் மக்களைப் பார்வையிட்டதுடன் பால்மா வகைகளை வழங்கிய மன்னார் பிரஜைகள் குழுவினர் இம்மக்களுக்கான தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கு கிடுகுகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்துள்ளனர். (18)

## அறுவடையில் ஈடுபட்ட இளைஞர் பாம்புக் கடிக்கு இலக்கானார்!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்ட வயலில் இளைஞர் ஒருவர் காலபோக நெல்அறுவடையில் ஈடுபட்டிருந்த வேளை பாம்புக்கடிக்கு இலக்காகினார். கந்தையா-தினேஸ் (வயது 17) என்ற இளைஞனே கடந்த வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் பாம்புக் கடிக்கு இலக்காகினார் மேற்படி இளைஞனை அறுவடையில் ஈடுபட்டவர்கள் வட்டக்கச்சி வைத்திய சாலையில் அனுமதித்த போது மேலதிக சிகிச்சைக்காக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (12)

**என்** பராமரிப்பில் பதினாறு நேசறிப் பிள்ளையள் இருந்தனர். அண்டைக்கு விடிய எழும்பி அந்தப் பிள்ளையள் எல்லாத்தையும் குளிக்கவாத்து வெளிக்கிடுத்திப் போட்டு விடிய சாப்பாட்டையும் கொடுத்தன். எல்லாப்பிள்ளையளும் வடிவாய் சாப்பிட்டுட்டு இருக்க அவையள சும்மா இருக்க விடக் கூடாது எண்டுட்டு விளையாட்டுச் சாமான்களையும் கொடுத்து விளையாட விட்டன். அவையள் நல்ல புழுகத்தில எல்லோருமாய்ச் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்திச்சினம்.

அப்ப அங்க நிண்ட ரீச்சர் ஒராள கூப்பிட்டு நான் குளிச்சிட்டு வாறன் இவையள பார்த்துக் கொள்ளுங்கோ எண்டு சொல்லிப் போட்டு நான்வெளியால கிணத்தடிப்பக்கம் போய் உடுப்பை வைச்சிட்டு நிக்க ஒரு சத்தம் கேட்டுச்சு என்ன சத்தம் எங்க இருந்து கேட்டது என்று ஒன்றுமே தெரியாமல் இருந்தது. அதால நான் சின்னாக்களின்ர ரூம் இருந்த பக்கம் போனன். நான் அங்க போக அந்தரூமுக்குள்ள தண்ணி வந்துட்டுது நான் அப்பத்தான் தண்ணியைக் கண்டன் கண்டவுடன என்ர புள்ளையள் இருந்த

ஒன்றரை) என்கிற பிள்ளையைத் தூக்கிக் கொண்டு எங்கட ரூமுக்க ஓடி வந்துட்டுது. இப்படி வந்த பிள்ளை ரூமுக்க தண்ணி வர ஆரதியை கீழே இறக்கி விட்டுட்டு கதவைச் சாத்தி தள்ளிப்பிடித்துக் கொண்டு இருந்தா. நான் வர ஆரதி கத்திக் கொண்டு இருந்தா பின்ன நான் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு உள்ளுக்கு ஓட எல்லாப்பிள்ளையளும் சேர்ந்து "அய்யோ அம்மா" என்று கத்தி பயந்து கொண்டிருந்தார்கள். நான் அவையளையும் "பிள்ளையள் எல்லாம் ஓடிவாங்கோ தண்ணி வந்துட்டுது" என்ன செய்யிறது எண்டு சொல்ல எல்லாப்பிள்ளையளும் என்னைக் கட்டிப்பிடிச்சுக் கத்திக் கொண்டு இருந்தார்கள்.

இந்த நிலையில் யாரைத் தூக்குவது இவர்களை எப்படிக் காப்பாத்துவது எண்டு எனக்கு எதுவுமே ஓடேல்ல என்ன செய்யிறது எப்படி இந்தப் பிஞ்சுப் பிள்ளையளைக் காப்பாற்றுறது அதுகள் கத்திக் கொண்டே இருந்துச்சுதுகள். பிறகு கொஞ்ச நேரத்தில கடல் இன்னும் பெருகி உள்ளுக்க தண்ணி மட்டம் கூடிக் கொண்டு வந்தது. அதுல நிண்ட எல்லாரையும் அறைக்குள்ள தள்ளிக் கொண்டு போட்டுது. அதுக்குள்ள போனவுடன எல்லோரையுமே தண்ணி

பிறகு கொஞ்ச நேரத்தில தண்ணி கொஞ்சம் வத்த தப்பியிருந்த பிள்ளையளை வீட்டுச்சுவருக்கு மேல ஏத்தினம். அப்ப இந்தத் தம்பியையும் மேல ஏத்தி வயித்தை அமத்தி தண்ணியை வெளியால எடுத்தம். தண்ணி எடுத்தாப் பிறகுதான் அவன் மெல்லமா கண்ணத்திறந்து மயக்கம் தெளிஞ்சான். மயக்கம் தெளிஞ்ச உடனயும் தண்ணிக்குள்ள செத்துப்போய் கிடந்த ஆரதியைக் கண்டு "அம்மா அம்மா அங்க பாருங்கோ ஆரதியை" எண்டு எனக்குக் காட்டினான்.



அவனுக்கு நான் ஆறுதல் சொன்னேன் அவன் பயந்து "ஐயோ தண்ணி வரப்போகுது எங்களைக் காப்பாற்றுங்கோ" எண்டு கத்திக்கொண்டே இருந்தான்.

*சுனாமி பேரலைகள் எழுந்து முல்லைத்தீவைத் தாக்கிய வேளை சின்னாத்துப்பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள செந்தளிர் சிறுவர் இல்லத்திற்கு என்ன நடந்தது? அந்த மழலைப் பிஞ்சுகள் என்ன ஆனார்கள் என்பது பற்றிக் கடந்த எட்டுவருடங்களாக சிறியவர்களைப் பராமரித்து வரும் அம்மா(மாலதி -வயது-32) அங்கு நடந்த காட்சிகளில் சிலவற்றை விபரிக்கிறார்.*



இந்தநிலையில் கடற்புலி அண்ணாக்கள் உடன எங்கட இடத்துக்கு ஓடிவந்து தப்பியிருந்தாக்களையெல்லாம் சுவரில இருந்து கீழே இறக்கினம். ஆனால் சுவரில ஏறி இருந்து தப்பினதுகள் ஒண்டுமே கீழ இறங்கமாட்டம் எண்டு மேலேயே இருந்திச்சினம். அவயள் வந்தும் பயத்தில இறங்கவே இல்லை. அப்பிடியே அந்த அண்ணாக்கள் எல்லாரையும் பிடிச்சு இறக்கி பிள்ளையள தோள்ள வைச்சு சுமந்து கொண்டு முள்ளியவளைப் பக்கம்கொண்டு போய்ச்சினம்.

நான் எட்டு வருசமாய் இந்தசெந்தளிர் இல்லத்தில் இருந்து பிள்ளையளைப் பராமரிச்சுக்கொண்டு வாறன். ஒரு பிள்ளை

**பகுதி 16**

யள் ஒண்டையுமே காணேல்ல. எல்லாரையும் தண்ணி கடலுக்குள்ள திருப்பி இழுத்துக் கொண்டு போட்டுது போல இருக் குது. நான் எனி அந்தப் பிள்ளையளைப் பாக்க ஏலாது. குளிக்கவாத்து சாப்பாடு தீத்த ஏலாது. நாங்கள் உயிரோட இருக்க அந்தப் பிஞ்சுகள் கடலோட போய்ச் சேந்திட்டுதுகள்.

பராமரிக்க உறவுகள் இல்லாமல் தத்தளிச்சுக்கொண்டிருந்த பிள்ளையளை எடுத்து பராமரிச்சுவர கடல் அப்படியே விறாண்டி அள்ளிக்கொண்டு போட்டுது. என்ர பிள்ளையள் எல்லாம் போட்டுதுகள் என்று கண்ணீர் சொரிய கூறினாள் அந்த அம்மா.

# ஊட்டி வளர்த்த பிஞ்சுக் குழந்தைகளை கண்முன்னால் கடல் கொண்டுபோய்ச்சுது

வீட்டுக்கு ஓடிப்போனன் நான் அங்கபோக நாலு பக்கத்தாலையும் தண்ணி உள்ளுக்கு வந்திட்டுது.

அதப்பார்க்க என்ன அநியாயம் இந்தக் கடல் இப்படி வந்து இந்தப் பிஞ்சுப்பிள்ளை

அ.லோகீசன்

யள் எல்லாரையும் அள்ளிக் கொண்டு போகப்போகுது. என்ர தெய்வமே நீ இதுகளைக் காப்பாற்றமாட்டியோ ஏன் இப்படி வாறாய் என்று எல்லாம் மண்டாடிக் கொண்டிருக்க கடல் பெருகிக் கொண்டே இருந்திச்சு. அதப்பாத்தவுடன நான்

மூடிட்டுது. எங்கையுமே தண்ணிதான் தெரிஞ்சுது வேற ஒண்டுமே தெரியேல்ல என்ர பிள்ளையள், நான் ஊட்டி வளர்த்த செல்லக் குழந்தைகள் ஒண்டையுமே தெரியேல்ல.

என்ர கையில ரண்டு குழந்தையள் இருந்திச்சுதுகள் அதுகள் ரண்டும் என்னை இறுக்கிக் கட்டிப்பிடித்துக் கொண்டு இருந்தினம். எனக்கு கைகால் எல்லாம் விறைச்சுப்போயிற்று. பிறகு மூண்டாவது அலையும் வந்து அடிச்சுது. அதோட தண்ணி இன்னும் ஏறிற்றுது. இப்ப என்ர கையில இருந்த ஆரதி எண்டுர ஒண்டரை வயதுப் பிள்ளை என்னட்டை இருந்து பறிபட்டு தண்ணிக்குள்ள விழுந்து போச்சுது. இப்படி

யைக் கூட நாங்கள் இழந்ததேயில்லை. ஆனால் இந்தக் கடல் வந்து எங்கட பிள்ளையள் எல்லாரையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கக கொண்டு போட்டுது.

செந்தளிர் சிறுவர் இல்லத்தில் பயன் பெற்று வரும நிறஞ்சனா என்ற பதின்



## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

வாசலுக்குள்ளால வீட்டுக்குள்ள போட்டன்.

என்ர பிள்ளையள் பதினாறும் இருந்த ரூம் எல்லாம் தண்ணி வந்திட்டுது. பாவங்கள் எதுவுமே தெரியாமல் எல்லாம் சேர்ந்து கத்திக் கொண்டு இருந்திச்சுதுகள். இப்படியிருக்க எங்கட ரூமுக்குள்ள நிறஞ்சனா (வயது 13) எண்டுற பிள்ளை ஆரதி (வயது

இருக்க வெள்ளம் வர கதவச் சாத்திப் பிடிச்சுக்கொண்டிருந்த தங்கச்சி( நிறஞ்சனா) ஒரு கயித்த பிடிச்சு என்னட்ட எறிஞ்சா நான் அதைப் பிடிச்சுக்கொண்டிருக்க என்ர கையில இருந்த சின்னத்தம்பியும் கழுத்தைக் கீழ போட்டுட்டான். எனக்கு பயமாய் இருந்திச்சுது.

தண்ணி இடுப்பளவுக்கு வத்தின உடன நான் அங்க எல்லாம் என்ர பிள்ளையள் ஏதாவது தப்பியிருக்குங்கள் எண்டு தேடிப் பாத்தன். ஒருத்தரையும் காணவே இல்லை. கடைசியா நான் வளத்த பதினாறு பேரில என்னைக் கட்டிப்பிடிச்சு அழுத குழந்தை

மூன்றுவயதுச் சிறுமி சம்பவத்தில் சிக்கி உயிர் தப்பி இருந்தார். அவர் சம்பவத்தில் தான் கண்ட கொடுமையான அனுபவங்களை விபரிக்கிறார். அவை அடுத்த பகுதியில்.

**தொடரும்**

# உரிய நிவாரணம் வழங்கக் கோரி மாத்தறை சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்

மாத்தறை மாவட்டத்தில் தமக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் எனக்கோரி சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலி வீதியின் போக்குவரத்தைத் தடை செய்து ஆர்ப்பாட்டம் நடத்திய இவர்கள் திங்கட்கிழமை நிவாரணம் கிடைக்காது விடின் தாம் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.(32)

# 1800 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

சிறிலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு 1800 கைதிகள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் யாவரும் சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களாவர். நாட்டில் உள்ள 27 சிறைச்சாலைகளில் இருந்து இவர்கள் சனாதிபதியின் பொதுமன்னிப்பு திட்டத்தின்படி விடுதலை செய்யப்பட்டனர். (32)

# சுனாமி நிவாரணப் பகிர்வு குறித்து நெதர்லாந்து கண்காணிக்கும்

## - நெதர்லந்து வெளியுறவு அமைச்சர்

சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணங்கள் பகிரப்படுவது தொடர்பில் நெதர்லாந்து அரசாங்கம் கண்காணிப்பை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை வந்த நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் கடந்த வியாழக்கிழமை இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். நெதர்லாந்து அரசாங்கம் சுமார் 200 மில்லியன் டொலர்களை இலங்கையின் நிவாரணப் பணி களுக்காக அரச சார்பற்ற நிறு வனங்களின் ஊடாக வழங்கியுள் ளது. அதே நேரம் இந்தோனேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடு களின் சுனாமி பாதிப்பு புனரமைப்புகளுக்காக நெதர்லாந்து அரசாங்கம் 200 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.இந்த நிலையில் சாதி, மத பேதமின்றி நிவாரணங்கள் பகிரப்படுவதன் அவசியம் குறித்தும் நெதர்லாந்தின் வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தியுள் (32)

## - சுனாமி நிவாரணத்துக்கு வரும் -

# தேவையற்ற பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதியில்லை

(கொழும்பு)

சுனாமியின் பின்னர் இலங்கைக்கு எடுத்துவரப்படும் நிவாரணங்களில் உரிமைகோரப்படாதவைமற்றும்தேவையற்ற பொருட்களை கட்டுநாயக்கவானூர்தி தளம் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் இருந்துஎடுத்துச்செல்ல அனுமதிப்பதில்லை என அத்தியாவசிய ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.அதேநேரம் உரிமை கோரப்படாத பொருட்கள் பரீட்சிக்கப்பட்டு அவை இடம் பெயர்ந்தவர்களுக்கு விநியோகிக்க தரமானவையாகஇருக்குமானால் அவற்றை அரச அதிகாரிகள் ஊடாக விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது (32)

# குடிவரவு குடியகல்வு திணைக்கள உதவிக் கட்டுப்பாட்டாளர் கைது

சிறிலங்கா குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவர் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் 31 லட்சம் ரூபாவை சட்ட விரோதமாக சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு பிரதான நீதிபதி சரோஜினி குசல விஜயவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபரை 15 லட்ச ரூபாய் சீரப் பிணையிலும் 10 ஆயிரம் ரொக்கப்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார். நீதிமன்றத்தின் அனுமதியின்றி வெளிநாடு செல்லக் கூடாது எனவும் இவரின் கடவுச் சீட்டை ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடைவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2005.02.15ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை:-**

01) அலுவலர் (ஆண்கள்)
02) உதவி அலுவலர் (ஆண்கள்)
03) கணினித் தரவுப் பதியுநர் (இருபாலாரும்)

**கல்வித் தகைமை**

பணிநிலை 01) க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்
பணிநிலை 02) க.பொ.த. (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும்.
பணிநிலை 03) க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றியிருப்பதுடன், எம்.எஸ்.ஒபிஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி - பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் :- 2005-02-23 காலை 10.00 மணிக்கு
நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :- மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

குறிப்பு :- நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப் பகுதி

(சி-11310)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 1952 - 02 - 15



இறப்பு 2005 - 01 - 07

அமரர்

**சின்னப்பு வர்ணகுலசிங்கம்**


அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து
ஆளாக்கி இம்மண்ணில் வாழ
வைத்த எம் அன்புத் தந்தையாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (06.02.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.52, சேவிஸ்வீதி,
கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி. (5641)

குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



ஈழத்தின் மொட்டாய் 30.11.1972
மண்ணில் வித்தாய் 26.12.2004

தமிழீழ காவல் பணியில்
ஆற்றிய சேவைகள் எத்தனை
யாரையும் கோபம் கொண்டு
பாராது உன் முகம்
எல்லோரையும் அரவணைக்கும்
அன்பு கொண்ட உன் உள்ளம்
எம்மைவிட்டுப் போகாது
என்றும் உன் நினைவலைகள்

முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர்


**கந்தசாமி - குணேஸ்வரன் (குணேஸ்)**

(பரிசோதகர் (I.P) தமிழீழ காவல்துறை)

08.02.2005 அன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் மதிய போஷனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விவேகானந்தா ச.ச.நிலையம்,
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு. (5638)

திருமதி.குணேஸ்வரன் ஜெயநந்தினி,
குடும்பத்தினர்.





திண்டுக்கல் அருகே வேடசந்தூரில் ம.தி.மு.க விவசாயிகள் மாநாடு நேற்று தொடங்குவதற்கு முன் இதற்கான பந்தலின் முகப்பு தோற்றத்தை வை.கோ பார்வையிட்ட காட்சி

# ரயில்களை தகர்க்க நக்சலைட்டுக்கள் முடிவு

## ஆந்திரா, தமிழகத்தில் பலத்த பாதுகாப்பு

(புதுடில்லி)

கோவை ஊடாக ஆந்திராவரும் ரயில்களை குண்டு வைத்து தகர்க்கப்போவதாக ஆந்திராவில் செயற்பட்டுவரும் நக்சலைட் தீவிர வாதிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் மக்கள் போர்க்குழு என்ற பெயரில் நக்ச லைட் தீவிரவாதிகள் இயங்கி வருகிறார்கள். காங்கிரஸ் அரசு நக்ச லைட் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. இதன் காரணமாக நக்சலைட்டுகள் தீவிர வாத செயல்களை நிறுத்தி வைத்திருந்தனர். ஆனால் பேச்சுவார்த்தை முறிந்ததையடுத்து நக்ச லைட் தீவிரவாதிகள் மீண்டும் வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நக்சலைட் தீவிரவாதிகள் தமிழ் நாடு மற்றும் கேரளாவில் இருந்து ஆந்திராவுக்கு வரும் ரயில்களை குண்டு வைத்து தகர்க்கப் போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளனா. இதையடுத்து தமிழகம் முழுவதும் பொலிசாா் மற்றும் ரயில்வே பொலிசார் உஷார் படுத்தப்பட்டுள்ளனா. தமிழ் நாட்டில் கோவை வழியாக ஆந்திரா மற்றும் கேரளாவுக்கு 16 எக்ஸ்பிரஸ் ரயில்களும், ஈரோடு வழியாக 19 எக்ஸ்பிரஸ் ரயில்களும் இயக்கப்படுகிறது. இந்த ரயில்களுக்கு நக்சலைட்டுகளால் ஆபத்து ஏற்படாமல் தடுக்கும் வகையில் தீவிர பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கோவை, திருப்பூர் ரயில் நிலையங்களில் பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக ஈரோட்டில் ரயில்வே பொலிஸ் உயரதிகாரி துரைராஜ் கியூ பிரிவு பொலிசாருடன் ஆலோசனை நடத்தி வருகிறார். கோவைபுதூர் தமிழ் நாடு சிறப்பு காவல்படையின் ஒருபட்டாலியன் தமிழகஆந்திரா எல்லையில் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதே போல் தமிழ் நாட்டில் பொம்முடி, தா்மபுரி, ஓசூர், பாச்சூர், திருப்பாத்தூர், ஜோலார் பேட்டை ரயில் நிலையங்களுக்கு அச்சுறுத்தல் வந்துள்ளதை தொடர்ந்து அங்கு பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். கோவை திருப்பூர் ரயில் நிலையங்களில் பொலிசாரின் தீவிரசோதனைக்கு பின்னரே ரயில்கள் புறப்பட்டு செல்கின்றன.

# மக்களவைத் தேர்தலில் மக்கள் தீர்ப்பை ஜெயலலிதா கொச்சைப்படுத்திவிட்டார்

## பா.ம.கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கண்டனம்

(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் தீர்ப்பை ஜெயலலிதா கொச்சைப் படுத்தி விட்டதாக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.பா.ம.க.நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தேர்தலில் தோற்பவர்கள் காரணத்தைத் தேடி அலைவது என்பது அரசியலில் வாடிக்கையானதுதான். ஆனால் அதற்கும் ஒரு எல்லை உண்டு அந்த எல்லையையும் கடந்து விட்டார் முதலமைச்சர் ஜெயலலிதா. நாட்டிலுள்ள 545 மக்களவைத் தொகுதிகளுக்கும் தேர்தல் ஆணையாளர் கண்காணிப்பில் நடந்த தேர்தலில் தமிழ் நாட்டில் உள்ள 39 தொகுதிகளுக்கு மட்டும் மறுதேர்தல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப் போவதாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். இந்த 39 தொகுதிகளில் மட்டும் மோசடி நடந்து விட்டதாம் தேர்தலின் போது தேர்தல் பொறுப்பில் இருந்த அதிகாரிகள் அ.தி.மு. அரசுக்கு எதிராக செயற்பட்டார்களாம். அவரது நிர்வாகத்தில் அவருக்கும் கீழ் பணியாற்றிய, இப்போதும் பணியாற்றிக் கொண்டிருக்கிற அரசு உயரதிகாரிகள் மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

மக்களவைத் தேர்தலில் மாவட்ட முதன்மை தேர்தல் அதிகாரிகளாக பணியாற்றியவர்கள் மாவட்ட கலெக்டர்கள் முதலமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டு இந்திய ஆட்சிப் பணியில் உள்ள ஐ.ஏ.எஸ். வர்க்கத்திற்கே எதிரான பகிரங்க போர் என்றே எடுத்துக் கொள்ளப்படும். தேர்தல் முடிந்து 7மாதம் ஆகிவிட்டது. இன்னும் ஓராண்டில் சட்டசபைத் தேர்தல் வர விருக்கும் சூழ்நிலையில், ஏன் இந்தக் குற்றச்சாட்டு? ஏன் நடவடிக்கை என்று பிரகடனம்? வரப்போகும் சட்டசபை தேர்தலில் ஆளும் கட்சியினருடைய தில்லுமுல்லுகளுக்கெல்லாம்அனுசரணையாக நடந்து கொள்ள வேண்டும் என்று மறைமுகமாக மிரட்டவுமே இப்படியொரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார் என்று கருத இடமிருக்கிறது.

முதலமைச்சரின் இந்த அறிவிப்பும், மறைமுக மிரட்டலும் அகில இந்திய ஆட்சிப்பணியில் உள்ள அதிகாரிகள் முறையாக செயற்படுவதற்கும் இடையூறுகளையும் பாதிப்புகளையும் ஏற்படுத்திவிடும் இது குறித்து மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மாவட்டக் கலெக்டர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள் சுதந்திரமாகவும். நியாயமாகவும் பணியாற்றுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதலமைச்சரின் இந்த திடீர் அறிவிப்பு மக்களை குழப்பி திசைதிருப்பவும், வரலாறு காணாத தோல்வியால் துவண்டு போயிருக்கும் கட்சித் தொண்டர்களை உற்சாகப்படுத்துவதற்கும் தான் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் சிந்தித்து தீர்க்கமாக அரசுக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பை கொச்சைப்படுத்தும் இத்தகைய புகார்களால் மக்களை திசை திருப்ப முடியாது என ராமதாஸ் மேலும் கூறியுள்ளார்.


தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பின் நிருவாகத்தின் கீழ்

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்

இலவச ஆங்கில வள நிலையமும் கல்விக் கூடமும்

London Sri Kanaga Thurkkai Amman

FREE ENGLISH RESOURCE AND LEARNING CENTER

காலம் : 06.02.2005 ஞாயிற்றுக் கிழமை, பிற்பகல் 2.00 மணி

இடம் : இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலைய கட்டடம். 401 / 1, கஸ்தூரியார் வீதி, யாழ்.

விசேட அதிதிகள்

திரு.றோபேர்ட் ஈவன்ஸ்
ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்.

திரு.எஸ்நவரட்ணம்.
இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நிதியம்.

திரு.எஸ்.ஸ்கந்ததேவா.
இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நிதியம்.

திரு.சி.இளம்பரிதி
பொறுப்பாளர் அரசியற்றுறை, யாழ்.மாவட்டம்

திரு.ரி.ரவிசங்கர்
தலைவர்,
தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு.

ஆர்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்


தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு

TAMILita.org

TAMIL INFORMATION TECHNOLOGY ASSOCIATION

## சர்வதேச கிரிக்கெட்டில் சச்சின் 100 சதங்கள் பெறுவர்

### ஸ்ரீவ்வோ நம்பிக்கை



சர்வதேச கிரிக்கெடில் சச்சின் டெண்டுல்கர் மட்டுமே 100 சதங்கள் அடிக்கும் தகுதி பெற்றிருக்கிறார். இது வரை அவர் 71 சதங்கள் அடித்துள்ளார். அவருக்கு உடல்தகுதி கைகொடுக்கும் பட்சதில் மேலும் 30 சதங்கள் அடிப்பார் என அவுஸ்திரேலியா அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டுபாயில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா,இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் அவுஸ்திரேலியாவை நெருங்கிவிட்டன. விரைவில் இந்த அணிகள் அவுஸ்திரேலியாவுக்கு மிகப்பெரிய சோதனை கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என்றார். அத்துடன் அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த மெக்ராத், வோர்ன், கில்கிறிஸ்ட் ஹெய்டன், லீமான், லாங்கர் ஆகிய மூத்த வீரர்கள் ஒரே நேரத்தில் அணியில் இருந்து விலகுவார்கள். இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் சாதனையின் உச்சத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாவுக்கு மிகப்பெரிய சரிவு ஏற்படும் என்னும் ஸ்டீவ்வோ தெரிவித்தார். அவுஸ்திரேலியா அணிக்கு அடுத்தடுத்துப் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த சாதனைத் தலைவர் என்ற தகுதியை ஸ்டீவ்வோ பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமித்தின் நிதானமான துடுப்பாட்டம்
# இங்கிலாந்தை வீழ்த்தியது தென்னாபிரிக்கா




தென்னாபிரிக்க அணியின் தலைவர் சிமித்தின் நிதானமான துடுப்பாட்டத்தால் இங்கிலாந்து அணியை மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது தென்னாபிரிக்கா அணி.

இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 7 ஒருநாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் போட்எலிசபத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் சார்பாக சோலங்கி 66 ஓட்டங்களைப் பெற்றார். ஆரம்ப இணையாக ஆடிய மார்கஸ் ரெஸ்கொதிக்- ஜிரைன்ட் ஜோன்ஸ் ஆகியோர் நல்ல அடித்தளத்தை இட்டனர். இவர்கள் இருவரும் ஷேன் பொலக்கின் பந்துகளை சிக்சர்களாகவும், பவுண்டரிகளாகவும் விளாசினர்.எனினும் இந்த இணையை தென்னாபிரிக்காவின் அன்ருநீல் தகர்த்தார். பின்னர் சோலங்கி ஸ்ரோஸ் இணை ஒவ்வொரு ஓட்டமாகச் சேர்த்தது. ஸ்ரோஸ் ஆட்டமிழந்ததும் கெவின்பிறர்சன் சோலங்கியுடன் இணைந்தார். சோலங்கி அணியின் எண்ணிக்கை 207 ஆக இருந்தபோது ஆட்டமிழந்தார். பின்னர் பீற்றர்சன் ஆட்டமிழந்ததும் ஏனைய விக்கெட்டுக்கள் மூன்றும் சொற்ப ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டன.

பின்னர் 268 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித்தின் சதத்தின் உதவியுடன் 7 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட்டியது. அவ்வணி 89 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையிழந்திருந்தபோதும் ஸ்மித், கிப்ஸ் இருவரினதும் ஆட்டத்தை கொரின் வூட்,ஜைல்ஸ், ரெஸ்கொதிக் ஹோகாட் ஆகியோரினால் நிறுத்த முடியாமல் போய்விட்டது. எனினும் 24 ஆவது ஓவரில் ரெஸ் கொதிக்கின் பந்தில் கொலின்வூட் பிடியெடுத்து ஆட்டமிழக்கச் செய்யும் வாய்ப்பை இழந்தார். 24 ஆவது ஓவருக்குப் பின்னர் ஓட்டவிகிதம் 6 என்று இருந்தபோதும் இறுதி நேரத்தில் 10 என்ற ஓட்ட




வீதத்துக்குச் சென்றது. எனினும் 50 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்களை மட்டுமிழந்து தென்னாபிரிக்கா 270 ஓட்டங்களைப் பெற்றது.

ஏழு போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றிகளைப் பெற்று சமநிலையில் உள்ளது.




## பந்து வீச்சு விதிமுறை ஐ.சி.சி.யால் தளர்வு



கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச்சு முறைக்கு விதிக்கப்பட்டிருந்த விதிமுறைகளைச் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தளர்த்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒரு வீரர் பந்து வீசும்போது 15 பாகைக்கு மேல் அவர்களது கையை வளைத்து வீசமுடியும். இந்த முடிவு நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பந்துவீச்சு முறைக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு சுமார் 60 வருடகாலமாக கிரிக்கெட் ஆட்டத்தைப் பாதித்திருந்ததாகவும் பல வீரர்கள் இது பற்றி புகார் கிளப்பியபடியிருந்ததாகவும் இந்தத் திடீர் முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கடும் விதிகளினால் முரளிதரன் உட்படப் பல பேரின் பந்து வீச்சில் சந்தேகம் எழும்பியது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் பல முன்னணி வீரர்கள் பலரும் இந்தக் கட்டுப்பாட்டை ஏதோ ஒரு வகையில் பந்துவீச்சாளர்கள் மீறுவதாகவும் தெரிவித்தனர்.

### இந்திய பயணத்துக்கான பாக். அணியில்
## அக்தரை நீக்குமாறு முன்னணி வீரர்கள் கோரிக்கை
## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெரும் குழப்பத்தில்!

இந்தியப் பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் வேகப் பந்துவீச்சாளர் அக்தரை சேர்க்கக்கூடாது என்று முன்னணி வீரர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளதாக பத்திரிகைச் செய்தி ஒன்று வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது அக்தர் காயம் அடைந்தார். இதையடுத்து அவர் தாயகம் திரும்பினார். இந்தியப் பயணத்தில் எப்படியும் இடம்பிடிப்பேன் என்று அவர் கங்கணம் கட்டிக்கொண்டு காத்திருக்கிறார். ஆனால் முன்னணி வீரர்களின் எதிர்ப்புக் காரணமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குழப்பம் அடைந்துள்ளது.

அணித் தலைவர் இன்சமாம், துணைத் தலைவர் யுகானா, ரசாக் அபிரிடி,யூனிஸ் கான் நவீத் உல்ஹாசன்,சல்மான்பட் ஆகியோர் அக்தர் இடம்பிடிக்க வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அக்தரை அணீயல் சேர்க்கும் பட்சத்தில் இந்தியப் பயணத்துக்கான அணியில் இருந்து நாங்கள் விலக்கிக்கொள்வோம் என்று இவர்கள் மிரட்டல் விடுத்துள்ளதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விவிகாரம் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், பத்திரிகைச் செய்தியில் உண்மை எதுவும் இல்லை என்றும் காயம் சரியாக வேண்டும் என்பதற்காக அக்தர் அவுஸ்திரேலியாவில் இருந்து தாய் நாட்டுக்கு அழைக்கப்பட்டார். பாகிஸ்தானைக் காட்டிலும் அவுஸ்திரேலியாவில் நல்ல சிகிச்சை வசதிகள் இருக்கின்றன. அதுமட்டுமன்றி அனுபவம் மிக்க அணி மருத்துவர் அவுஸ் திரேலியாவில் இருக்கும்போது அக்தரை பாகிஸ்தான் அழைத்துப் பெரிய கேள்விக் குறியை உண்டாக்கி உள்ளது. இதற்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சரியான விளக்கம் அளிக்கவில்லை.



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது அக்தர் இரவு விடுதிகளில் அதிக நேரம் செலவிட்டதாகவும், அதனால்தான் அவர் சரியான முறையில் சாதிக்கவில்லை என்றும் செய்தி வெளியானது. இதற்கு ஆதாரமாக இரவு விடுதியில் அக்தர் இருப்பது போன்ற புகைப்படங்கள் இணையத்தளத்தில் வெளியானது. இவை அனைத்தும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு எரிச்சலை உண்டாக்கியது. எனவே இதனைக் காரணமாக வைத்து இந்தியப் பயணத்தில் இருந்து அக்தர் புறக்கணிக்கப்பட அதிகமான வாய்ப்புக்கள் உருவாகியிருக்கின்றன. வரும் 25 ஆம் திகதி பாகிஸ்தான் அணி இந்தியா செல்லவுள்ளது குறிப்பிடத்தக்கது. 5 ஆண்டுக்குப் பினன்ர் பாகிஸ்தான் அணி இந்தியாவில் டெஸ்ட் போட்டியில் ஆடக் காத்திருக்கிறது. போட்டிகளுக்கான திகதிகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. அநேகமாக அடுத்தவாரத் தொடக்கத்தில் போட்டிக்கான அட்டவணை உறுதி செய்யப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

### பான்பசிபிக் இறுதிப்போட்டிக்கு
## மரியா சரபோவா, ஷினாசே டெவன் போட் தகுதி

முதல்தர டென்னிஸ் வீராங்கனையான லின்சே டெவின்போட்டும் மரிய சரபோவாவும் இன்று நடைபெறும் பான்பசிபிக் ஓபன் இறுதிப்போட்டியில் மோதுகின்றனர்.
சரபோவா நேற்று டோக்கியோவில் நடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் யப்பானின் ஷினோபு அசகோவை 6-1,7-6,7-3 என்ற செட்டில் தோற்கடித்தார் மேலும் ஒரு அரையிறுதிப் போட்டியில் டெவன்போட் ரஷ்யாவின் அமெரிக்க ஓபன் சம்பியனான ஸ்லட்லனா குஸ்னட்ஸோவாவை 6-1,7-6,7-2 என்ற செட்டில் வென்றார். சரபோவா கூறும்போது இது திறமான போட்டியாகும் என்றும், இறுதிப் போட்டி வரை இருவரும் போராடி வென்றதாகவும் தெரிவித்தார்.

## ஹென்மன் பங்கேற்பது சந்தேகம்

அடுத்த வாரம் மார்சீலில் நடைபெறும் மார்சீலி ஓபன் டென்னிஸில் பிரிட்டனின் ஹென்மன் பங்கேற்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

அவர் அண்மையில் மெல்போர்னில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் 3 ஆவது சுற்றிலேயே முதுகுவலி காரணமாக நாடுதிரும்ப வேண்டியேற்பட்டது.

உடனடியாக அவர் இரு வைத்தியர்களிடம் சென்று சிகிச்சையும் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றார். அவர்களின் ஆலோசனைகளின்படி ஹென்மன் எதுவித பயிற்சிகளிலும் போட்டிகளிலும் ஈடுபட முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் பெப்ரவரி 14 இல் ஆரம்பமாகும் ரொட்டர்டாம் போட்டிகளில் கலந்து கொள்வார் என்று கூறப்படுகிறது.

### 2012 ஒலிம்பிக் போட்டி
## நடத்தும் இடம் குறித்து ஆராயக் குழு நியமனம்

2012 ஆம் ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் இடம் தொடர்பாக ஆராய 13 பேர் கொண்ட ஒலிம்பிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

லண்டன், பரிஸ் மெட்ரிக், நியூயோர்க், ஆகிய இடங்களுக்குச் சென்று போட்டி நடத்த உத்தேசிக்கப்படும் மைதானம் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளும். அந்த வகையில் அண்மையில் அக்குழு மெட்ரிட் சென்று வந்துள்ளது.

இவர்களின் வருகை பற்றி மெட்ரிட் ஒலிம்பிக் குழு பெலிஷனோ மயோஸ் அவர்களின் பரிசோதனை விளைவுகள் மெட்ரிட்டில் போட்டிகளை நடத்தக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்தார்.


இந்தக் குழுவினர் பெப்ரவரி 3 முதல் 6 ஆம் திகதி வரை மெட்ரிட்டிலும், 16 முதல் 19 ஆம் திகதி வரை லண்டனிலும், 21 முதல் 24 ஆம் திகதி வரை நியூயோர்க்கிலும் மார்ச் 9 முதல் 12 ஆம் திகதி வரை பரிசிலும், 14 முதல் 17ஆம் திகதி வரை மொஸ்கோவிலும் ஆய்வுகளை மேற்கொள்ளும்.

இதன் பின்னர் சர்வதேச ஒலிம்பிக் சபை வாக்களிப்பின் பின்னர் போட்டி நடைபெறும் இடம் அறிவிக்கப்படும். அந்த வகையில் பரிஸ் முதலிடம் வகிக்கலாம் என்றும் ஊகங்கள் வெளியாகின்றன.

### வடக்கு–கிழக்கு மாகாண
## மெய்வல்லுநர் சங்கம் அங்குரார்ப்பணம்

வடக்கு-கிழக்கு மாகாண மெய்வல்லுநர் சம்மேளனத்தை அமைக்கும் நோக்குடன் எட்டு மாவட்ட மெய்வல்லுநர் சங்க நிர்வாகத்தினரையும் இணைத்த தேசிய கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.00 மணியளவில் தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் மாவட்ட மெய்வல்லுநர் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தேசிய அளவிலான விளையாட்டை மேம்படுத்தும் நோக்குடன் அனைத்து மாவட்டங்களையும் இணைத்து வடக்கு-கிழக்கு மாகாண மெய்வல்லுநர் சம்மேளனம் அமைக்கப்பட்டது. மேற்படி சம்மேளனத்தின் தலைவராக திரு. ரி. தெய்வேந்திரமும், செயலாளராக திரு. விஜயநீதனும் தெரிவு செய்யப்பட்டனர்.



## சிந்தனைக்கு

உலகவரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

# அழிவின் போதும்....!

"சுனாமி" நாட்டிற்குப் பேரழிவை ஏற்படுத்தியது. எனினும் சிறிலங்கா அரசும் அதன் ஆயுதப் படைத்தரப்பும் தம்மை இராணுவ ரீதியில் பலப்படுத்திக் கொள்வதில் முனைப்புக் காட்டுவதை எந்த விதத்திலும் குறைத்துக் கொள்ளவில்லை. மாறாக அழிவின் மத்தியிலும் முனைப்புப்படுத்தியுள்ளன என்றே கொள்ளலாம்.

சுனாமிப் பேரலைகளினால் மக்களுக்கு ஏற்பட்ட அவலம், இறப்பு என்பன ஈடு செய்யப்படுவதற்கு முன்பதாகவே சிறிலங்கா ஆயுதப் படைக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்வதிலும் அதனை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இதன் அடிப்படையில் மீட்புப் பணிகள் கூட மிகத் துரிதகதியில் முடுக்கிவிடப்பட்டதொன்றாகவே இருந்தது.

அதிலும் குறிப்பாக சுனாமியின் பின் சிறிலங்காவுக்கு முதல்வந்த நிவாரணம் மற்றும் மீட்புக் குழுவான இந்தியத் தரப்பு-குறிப்பாக இந்திய கடற்படை தனது மீட்பு நடவடிக்கைகளை சிறிலங்கா கடற்படைத் தளங்களிலேயே ஆரம்பித்தது. காலி கடற்படைத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கை திருமலை, நிலாவெளி வரையிலான கடற்படைத்தளங்கள் வரை இடம் பெற்றது.

இவ்வாறு மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்ட அதேவேளை மற்றொரு புறத்தில் ஆயுதப்படைத் தரப்பை வலிமைப்படுத்தும் போக்கும் 1500 கோடி ரூபா ஆயுதக் கொள்வனவிற்கென ஒரு உயர் மட்ட இராணுவக்குழு ஈரானுக்குப் பயணம் மேற்கொண்டது. இக்குழு உடனடியாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யாது விட்டாலும் நவீன ஆயுத தளபாடங்களைப் பார்வையிட்டுத் திரும்பியது.

இதே சமயம் சுனாமியின் பாதிப்பிற்குள்ளானதன் காரணமாக சிறிலங்காவிற்கு மனிதாபிமான ரீதியில் பெருமளவு நிவாரணப் பொருட்களும் நிதியுதவியும் பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்றது. இந்நிலையில் சுனாமியினால் கடற்படையும் பாதிக்கப்பட்டிருப்பதற்கு நிவாரணம் கோருவது போன்று சிறிலங்கா கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் நிதியுதவியில் இருந்து கடற்படைக்கும் போர்க்கலன்கள் கொள்வனவு செய்யப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

அதாவது சிறிலங்கா கடற்படைத் தளபதி கடற்படைக்கு மனிதாபிமான உதவி கோருவது போன்று. நிதியுதவி கோரினார். அதாவது சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்ப துயரங்களை விட சிறிலங்கா கடற்படைத் தளபதிக்கு கடற்படையின் விரிவாக்கம் முக்கியமானதாக உள்ளது.

கடற்படைத் தளபதியின் கோரிக்கை இவ்வாறானதாக இருக்கையில்விமானப்படைக்கெனப் பெருமளவிலான போக்கு வரத்து வானூர்திகளைக் கொள்வனவு செய்யுமாறு அரசாங்கத்தை விமானப்படை கோரியுள்ளது. கடற்படைதான் சுனாமியினால் பாதிக்கப்பட்டதெனில் விமானப்படையின் கோரிக்கை எதன் அடிப்படையிலானது? சுனாமிப் பாதிப்பைப் பார்வையிடுவதற்கும், நிவாரணப் பொருட்களை ஏற்றி இறக்கியதிலும் சிறிலங்கா வானூர்திகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகிவிட்டதா?

இவையாவும் ஒருபுறம் இருக்க சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க இன்று உத்தியோக பூர்வமாக பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளும் பயணத்தின் போது இராணுவ ஒத்துழைப்புக் குறித்து பாக். சனாதிபதி பர்வேசுஷ் முசுஷாரப்புடன் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை அரச தரப்பினர் மறுக்கப்பட்டவையாகவும் இல்லை.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாக்.விஜயத்தின்போது முக்கியமான கலந்துரையாடல்களும், உடன்பாடுகளும் ஏற்படலாம் எனத் தெரியவருகின்றது. இவற்றில் சில உடனடியாக வெளிவராமலும் போகலாம். ஆனால் எது எவ்வாறாயினும் சனாதிபதி சந்திரிகா ஆயுதப்படைப் பெருக்கத்தில் தீவிர அக்கறை கொண்டுள்ளார் என்பதையே இவை வெளிக்காட்டுகின்றன.

சிறிலங்கா அரசு சுனாமிப் பேரழிவை அடுத்து நிவாரணப் பணி என்றரீதியில் பல்வேறு நாட்டுப்படைகளும் இலங்கைக்குள் காலடி எடுத்துவைக்க அனுமதியளித்தது. இவ்விடயத்தில் சனாதிபதி சந்திரிகா நடந்து கொண்ட விதமானது ஒரு வகையில் இந்தியாவின் நோக்கத்திற்கு எதிரான நிலைப்பாடே ஆகும். அதாவது இந்தியாவிடம் ஆயிரக்கணக்கான படைகளை அனுப்பிவைத்தபோதும் மேலதிக தேவை இருப்பின் இந்தியாவிடம் கோராது ஏனைய நாடு களிடம் இருந்து பெற்றுக் கொண்டமையானது இந்தியாவை ஒரு வகையில் ஓரம் தள்ளும் முயற்சியே ஆகும்.

அதாவது சுனாமி சிறிலங்கா அரசிற்கும், ஆயுதப்படையினருக்கும் வெளிநாட்டு இராணுவங்களுடன் வெளிப்படையான நேரடித் தொடர்பிற்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளது எனலாம். இந்நிலையானது இந்தியாவை மேவி வெளிநாடுகளுடான இராணுவ உறவுகளை மேம்படுத்த முடியாமலும் இருந்த சிறிலங்கா அரசிற்கு சுனாமி கொடுத்த மற்றுமொரு வாய்ப்பாகும். இதனையே சிறிலங்கா ஆட்சியாளர்களின் தற்போதைய நடவடிக் கைகளும் வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

# சிறில.வந்த வெளிநாட்டுப் படைகளுக்கு நன்றி தெரிவிக்கிறார் ஜே.வி.பி த்தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை தொடர்ந்து மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு வருகை தந்த வெளி நாட்டு படைகளுக்கு ஜே.வி.பி நன்றி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க இது தொடர்பில் கருத்து வெளியிடும் பொழுது இலங்கையில் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்கும் நடவடிக்கைக்ளை சிறப்பான முறையில் முன்னெடுத்த வெளிநாட்டு இராணுவத்திற்கு தமது கட்சி நன்றி தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

ஒரு நாட்டினுள் வேறு நாடுகளின் படைகள் நுழையும் போது அது அந்த நாட்டின் இறைமையினை பாதிக்கும் விடயமாக கருதப்படுவது வழமை . ஆனால் இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளுக்கு வருகை தந்த வெளிநாட்டு படைகள் ஆயுதங்கள் இன்றி நிராயுதபாணிகளாகவே இலங்கை வந்தனர்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்துவிதமான உதவிகளையும் வெளிநாட்டு படைகள்மேற் கொண்டுள்ள தாகவும் ஜே.வி.பி தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது தமது பணிகளை நிறைவு செய்துள்ள இந்தப் படைகள் தமது நாடுகளுக்கு திரும்புகின்றன. இந்தவேளையில் அவர்களின் அளப்பரிய பங்களிப்பு குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதோடு அவர்களின் இந்தச் சேவையினை பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# சிறில.சுதந்திர நினைவு நிகழ்வுகளை ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் சுதந்திர நிகழ்வில் ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளாமை குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ளன.

சனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜே.வி.பி சார்பில் அமைச்சர்கள் அனுர குமார திஸாநாயக்க மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் மட்டுமே கலந்து கொண்டனர்.

அரசாங்கத்துடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அடுத்து ஜே.வி.பியின் உயர் மட்ட தலைமைகள் அரசாங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தவிர்த்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் சனாதிபதிக்கும் நெருக்கடியை எற்படுத்தும் ஜே.வி.பியின் நடவடிக்கையின் ஒரு அம்சமா கவே சுதந்திர தின நிகழ்வை ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் புறக்கணித்தமை . கவனிக்கப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை 'என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# பத்தனை சிறிபாதக் கல்லூரிக்கு 14 ஆம் திகதி முதல் மாணவர் அனுமதி

பத்தனை ஸ்ரீபாதக்கல்லூரியில் இந்த ஆண்டுக்கான மாணவர் அனுமதி எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளது. 2005 ஆம் ஆண்டுக்காக பத்தனை சிறிபாதக்கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான நேர்முகப்பரீட்சகைள் கடந்த டிசம்பர் இடம் பெற்றன.

இதில் பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 190 தமிழ் மாணவர்கள் கல்வியியல் கல்லூரி அனுமதிக்கு தகுதிபெற்றுள்ளனர் இதே வேளை கணிதம் விஞ்ஞானம் சங்கீதம் ஆகிய துறைகளுக்கு 30 பேர் அனுமதிக்கப்படவிருந்தபோதும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை.எனவே ஆரமப்பக்கல்விக்கான மாணவர் அனுமதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (32)

# தகுதியற்ற 4000 பேரை அரசாங்கம் அதிபர்களாக நியமித்துள்ளது

-இல.அதிபர்சேவை சங்கத்தலைவர் 'தெரிவிப்பு

தகுதியற்றோரை அரசாங்கம் பாடசாலை அதிபர்களாக தொடர்ந்தும் நியமித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் தகுதியற்ற 4000பேரை அதிபர்களாக பல் வேறு பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அதிபர் சேவை சங்கத் தலைவர் ஏ.ஏ.எம். பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் 7000 தகுதியற்றோரை அதிபர்களாக நியமித்துள்ளதாகவும் அதனை தொடர்ந்து தற்போதைய அரசாங்கமும் அதே பாணியை பின்பற்றி தகுதியற்றவர்களை பாடசாலை அதிபர்களாக நியமனம் செய்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிலுள்ள அரசாங்க பாடசாலைகளுக்கு 12500 அதிபர்கள், தேவைப்படும் நிலையில் 18586 பேர் அதிபர்களாக நியமனம் பெற்றதாகவும், இவர்களில் 7000 பேர் அரசியல் நியமன அதிபர்கள் என்றும் பெரேரா தெரிவித்துள்ளார். (32)

# 2005 ஆம் ஆண்டு வேலைத்திட்டம் குறித்து விசுவமடுவில் கலந்துரையாடல்

விசுவமடுப் பிரதேசத்தில் 2005 ஆம் ஆண்டு மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான ஒன்று கூடல் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு விசுவமடு மாவீரர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் ஒன்று கூடலில் பொது அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டம், சமூகத்தில் கல்வி கலை விளையாட்டு என்பனவற்றை வளர்த்துக்கொள்வது தொடர்பாகவும், ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது என விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் ச.சுடர் தெரிவித்துள்ளார். (19)

# கொழும்பு – மாத்தறை புகையிரதசேவை இம்மாத இறுதிக்குள் சீராக்கப்படும்

கொழும்பிற்கும் மாத்தறைக்கும் இடையிலான புகையிரத சேவைகள் இம்மாதம் இறுதிக்குள் சீரமைக்கப்பட்டுவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள காலநிலை எதிர்வரும் மூன்று வாரத்திற்கு தொடர வேண்டும் என்றும் அதேவேளை இந்த காலப்பகுதியில் மழை ஏற்படாமல் இருந்தால் மட்டுமே குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பணிகளை பூர்த்தி செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையிலான புகையிரத பாதை சீரமைப்புப் பணிகள் தொடர்பில் கண்காணிப்பை மேற்கொண்டு வரும் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி லலித்சிறி இந்தத்தகவலை வெளியிட்டுள்ளார்.

தற்போது புகையிரத நிலைய ஊழியர்களால் மேற்கொளப்படும் திருத்தப் பணிகளை அரசாங்கம் வேறு பிரிவினரிடம் கையளிக்காமல் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை ஊழியர் கூரை மீதேறி உண்ணாவிரதம்

(கொழும்பு)

சிறி ஜெயவர்த்தனபுர வைத் தியசாலையின் கூரையின் மீதேறி ஊழியர் ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். கடந்த முதலாம் திகதியில் இருந்து சுமார் 6 ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். எனினும் இதற்கு நிர்வாகம் எவ் வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமையை அடுத்தே ஒரு வர் கூரை மீதேறி உண்ணாவிரதப்போராட்டதில் ஈடுபட்டுள்ளார். தமது கோரிக்கை நிறை வேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் என அவர்எசரித்துள்ளார். (32)

## தேசியத்....

றுள்ளனர். இந்நில்யில் படையினருக்கும் பொதுமக்களுக்கும், இடையிலான முறுகல் நிலை அதிகரித்தது. மாலை 6.00 மணிக்குள் தேசியத்தலைவரின் படம் மீண்டும் மாட்டப்படாவிட்டால் மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்று வெடிக்கும் நிலை தோன்றி உள்ளதாக அம்பாறை செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கவியாளன் கூறுகையில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட ஜே.வி.பி உறுப்பினர் ஒருவரின் வருகையை எதிர்த்து நாம் அக்கூட்டத்தில் இருந்து வெளியேறினோம் இதன்பின் அந்த ஜே.வி.பி.பா.மன்ற உறுப்பினர் திருக்கோவில் பிரதேச செயலருக்கு வந்த உத்தரவொன்றில் வரும் 7 நாட்களுக்குள் தமிழீழ தேசியத்தலைவரின் படத்தை பிரதேச செயலகத்தில் இருந்து அகற்றுமாறு கூறினாராம் அதன்படி இன்று பிற்பகல் தேசியத்தலைவரின் படம் பிரதேச செயலகத்தில் இருந்து அகற்றப்பட்டு சந்திரிகாவின் படம் மாட்டப்பட்டது.நான் இதையடுத்து அங்கு சென்ற நான் சந்திரிகாவின் படத்தை அகற்றிவிட்டு மீண்டும் தேசியத் தலைவரின் படத்தை மாட்டமுயன்றபோது இராணுவத்தினர் என்னைச் சுட ஓடி வந்தனர் "என்றார்.

## உளவளத்துணை....

சந்திப்பினை முடித்துக் கொண்டு கிளிநொச்சியிலுள்ள வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் நடத்திய உளவளதுணை தொடர்பான ஆலோசனையின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பானது நேற்று 12.30 மணியளவில் வடகிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர் வணபிதா கருணாரெட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இதில் சுனாமியால் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு உளவளதுணை தொடர்பான கருத்துக்கள் வழங்கப்படுகின்றது என்று ஏற்கனவே உளவளதுணையில் பயிற்சி வழங்கி கொண்டிருக்கும் தொண்டர்களுடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது சுனாமி, மற்றும் யுத்தம் இரண்டாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், இந்த உளவளதுணை தொடர்பான கருத்துக்கள் வழங்கப்படுவதாகவும், இது ஒரு நீண்ட கால பயிற்சி என்றும் தொண்டர்கள் தெரிவித்தனர். மற்றும் ஏற்கனவே உளவளதுணை பயிற்சி வழங்கும் தொண்டர்கள் எதிர் கொள்ளும சவால்கள் குறித்தும் அந்த சவால்களை எதிர் கொள்ளக்கூடிய திட்டங்கள் பற்றியும், கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் உளவளதுணை தொடர்பான கருத்துக்களை வழங்குவதற்குத் தொண்டர்கள் அதிகம் தேவைப்படுகின்றது. இதனை உள்ளூர் பொது மக்களூடாக பெற்று அவர்களுக்கு பயிற்சி கொடுத்து தொண்டர்களாக சேவை செய்ய விடுவதற்கு நிதியுதவி தேவைப்படுகின்றது. எனக் கூறப்பட்ட போது அவ் நிதியுதவியினை தாங்கள் வழங்கவுள்ளதாக நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தெரிவித்தார். (கு.ச)

## சுனாமியின்..

கண்காணிப் புக்குழுவின் பதில் தலைவர் வொகன்விங்கிள் அவர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் கண்காணிப்புக் குழுவின் தலைவர் டொன்புறூவ் ஹொவ்டேக்குப் பதிலாக கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் அரசியல்துறைப் பொறுப்பாளருடனான வொக்ன் விங்கிள் சந்திப்பு இதுவே முதற்தடவையாகும்.

மேற்படி நேற்று மாலை 1.00 மணியளவில் நடைபெற்றற சந்திப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவருடனான குழுவினரும், மற்றும் விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல் துறைப்பொறுப்பாளர், மற்றும் மட்டு-அம்பாறைஅரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் சமாதான செயலக பிரதிப்பணிப்பாளர் பவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(கு.ச)

## பொதுக்கட்டமைப்பு...

என்ற வகையிலும், இந்தப் பணிகளில் நோர்வேத் தூதுவர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற வகையிலும் அவர் இவைசம்பந்தமாக தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய நடை முறைச் சிக்கல்கள் சம்பந்தமாக எங்களோடு கலந்துரையாடினார். குறிப்பாக இச் சந்திப்பின் பொழுது எம்மால் வலியுறுத் தப்பட்ட விடயம் இந்த இயற்கைப் பேரனர்த்தம் இடம்பெற்று ஒரு மாதம் கடந்து விட்ட நிலையிலும் எமது மக்களுக்கான நிவாரண மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச உதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான எந்தக் கட்டமைப்பையும் நிறுவுவதற்கான ஆக்க பூர்வமான நடைமுறைகள் எதுவும் இதுவரை எட்டப்படாதது எமது மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கின்றது. என்பதை அவருக்கு நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். விரைந்து செயற்பட வேண்டுமென்பதையும் விரைவாக சர்வதேச உதவிகள் எமது பகுதிகளுக்கு திருப்பப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றோம். எங்களால் கொடுப்பட்ட ஆலோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அந்த வகையில் இந்த பொதுக் கட்டமைப்பை நிறுவுவது எந்தளவு தூரம் சாத்தியப்படுமென்பது பற்றி எங்களால் கூற முடியாதிருக்கின்றது. ஏனெனில் அரசாங்கம் புதுப்புது நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருப்பதாகத்தான் தெரிகின்றதே ஒழிய ஒரு பொதுக்கட்டமைப்பை நிறுவுவதற்கு மனப்பூர்வமாக முன்வருவதாகத் தெரியவில்லை. அந்த வகையில் சர்வதேச உதவிகளை விரைந்து இங்குள்ள நடைமுறை ஒழுங்கு நடைமுறைகளுக்குச் சாத்தியமான வழிமுறைகளுக்கு ஊடாக எமது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய, எமது மக்களுக்கு அவற்றை நேரடியாக கொண்டு வந்து சேர்க்கக்கூடிய வழிமுறைகளை சர்வதேச சமூகம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதையும் இன்றைய சந்திப்பில் வலியுறுத்தியிருக்கின்றோம்.

**கேள்வி:-**

அரசாங்கம் ஏதேனும் விடயங்களை நோர்வே தூதுவரினூடாக அனுப்பி வைத்திருந்ததா?

**பதில்:-** நாங்கள் எமது தாயகப பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப் பணிகள் மீள் கட்டுமானப் பணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை அனுசரணையாளர்களூடாக ஏற்கனவே வழங்கியிருந்தோம் ஆனால் எமது ஆலோசனைக்கு எதிர் மறையான நிலைப்பாடுகளைத்தான் அரசாங்கம் தங்களுடைய கருத்துக்களாக அனுசரனையாளர்களூடாக எமக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றது. இவை அனைத்துமே எமக்கு அதிர்ச்சி தருவதாகத்தான் இருக்கிறது. இவை நடைமுறைச் சாத்தியமற்றவை. ஆகவே நடைமுறைச் சாத்தியமற்ற இவ்வாறான நிலைப்பாடுகளை அவர்கள் தெரிவித்துக் கொண்டிருப்பது ஒரு இணைக்கப்பாட்டுக்கு வந்து செயற்பாடுகளை மந்தப்படுத்துகின்ற ஒரு நோக்கோடு இது செய்யப்படுகின்றதென்றுதான் எம்மால் உணர முடிகின்றது. அதைத் தான் நாங்கள் அவர்களுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஏனெனில் ஒரு நடைமுறைச் சாத்தியமான யதார்த்த பூர்வமான கட்டமைப்பை நிறுவ அரசாங்கம் முன் வரவேண்டும் ஏனெனில் இப் பேரனர்த்தம் நடந்து ஒரு மாத காலமாகி விட்டது எமது மக்கள் ஒரு பெரும் மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்திருக்கின்றார்கள். ஒரு மாதம் கடந்தும் இந்தக் கட்டமைப்பை நிறுவுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் ஒரு தீவிர கரிசனை கொள்ளவில்லை. எந்த முனைப்புக்களையும் தீவிரப்படுத்தவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஆகவே சர்வதேச உதவிகள் எமது பிரதேசத்திற்கு ஏனைய வழிமுறைகளுக் கூடாக வேனும் எமது மக்களுக்கு வந்தடைய வேண்டுமென்பதுதான் எமது நிலைப்பாடாக இருக்கின்றது.

**கேள்வி:-**

என்னென்ன விடயங்களில் அரசாங்கத்திற்கும், உங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இப்போது எழுந்திருக்கின்றன. அல்லது உடன்பாட்டுக்கு வர முடியாத விடயங்கள் எவை?

**பதில்:-** மிக முக்கியமான விடயங்கள் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் அந்த மக்களினுடைய பாதிப்பின் அடிப்படையில் அந்த பிரதிநிதித்துவங்கள் இருக்க, வேண்டும். என்பதையும் இந்த சர்வதேச உதவிகளை இங்கே கொண்டு வருவதற்கு ஒரு சர்வதேச நடுநிலையான அமைப்பு இதற்குப் பொறுப்பாக அதாவது வடகிழக்கு நிவாரண மீள் கட்டுமான நடவடிக்கைகளுக்கு பாதுகாவலனாக ஒரு சர்வதேச நிறுவனம் இருக்க வேண்டும் என்பதை நாங்கள் ஏற்கனவே வலியுறுத்தியிருக்கின்றோம். ஆகவே அப்படியான ஒரு அமைப்புக்கு ஊடாகத்தான் எங்களுடைய மக்களுக்கு சர்வதேச உதவிகள் சரியான வகையில் வந்தடையும் என்பதை கடந்த கால அனுபவங்களின் அடிப்படையிலும்,கடந்த கால செயற்பாடுகளின் அடிப்படையிலும், எங்களால் வலியுறுத்தப்பட்ட விடயம் அவற்றை அரசாங்கம் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. வடக்குக் கிழக்கிலே முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே முஸ்லிம் மக்களினுடைய பிரதிநித்துவமும் சில மாவட்டங்களில் சரியாக அவர்களுக்குரிய பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டுமென்பதையும் நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். இவ்வாறு பல்வேறுபட்ட விடயங்கள் அதாவது இந்தக் கட்டமைப்பிலே உள் வாங்கப்பட வேண்டிய பிரதிநிதித்துவம் சம்பந்தமாகவும், வடக்குக் கிழக்கிற்கான இந்த மீள் கட்டுமான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியத்தின் பாதுகாவலனான விடயங்கள் அடங்குவதிலும், பல சிக்கல்கள் இருப்பதாகவே எமக்குத் தெரிகிறது.

**கேள்வி:-**

சிரான் அமைப்பிற்கு நடந்ததைப் போன்று தான் இந்த அமைப்பிற்கும் நடந்து விடுமென நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்:-**

எம்மைப் பொறுத்தவரையில் இது ஒரு இயற்கை பேரனர்த்தத்தால் ஒரு பாரிய அளவு மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்திருக்கின்ற மக்களுக்கு உடனடியான மனிதாபிமானத் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்பது அவசியமானது. இந்த மனிதாபிமான நெருக்கடியும் தேவையும், எழுந்திருக்கின்ற சூழலில் கடந்த காலங்களில் ஏற்பட்ட முரண்பாடுகள் போல் இடைவெளிகள் போல் தீர்வு காணப்படாத விடயங்கள் போல் இந்த அவசரமான விடயத்தையும் இழுத்தடிக்க முடியாது. இதற்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதையும் நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். இது எப்படிப் போகும் என்பதை என்னால் சொல்ல முடியாது ஆனால் நடைமுறையில் இதற்குத் தகுந்த ஒத்துழைப்பையும் தராத நிலைதான் இன்று வரை இருக்கின்றது.

**கேள்வி:-**

இதற்கான திட்டங்கள் ஏதாவது உங்களால் வகுக்கப்பட்டுள்ளதா?

**பதில்:-** எமது திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான செயலகம் எங்களுடைய புலம் பெயர்ந்து வாழ்கின்ற துறை சார் நிபுணர்களையும், எங்களுடைய தாயகப் பிரதேசத்திலே இருக்கின்ற நிபுணர்களையும் உள்ளடக்கி ஒரு குழுவை அமைத்து மாவட்டம் தோறும் சென்று ஒரு தேவை மதிப்பீடுகளைச் செய்து பாதிப்புக்களைக் கண்டறிந்து ஒரு ஆவணத்தை உருவாக்கியிருக்கிறோம். இங்கு உள்ள தேவை மதிப்பீட்டுக்கான ஆவணம் உருவாக்கப்பட்டு விட்டது. இதைச் சர்வதேச சமூகத்தின் கையிலே ஏற்கனவே கையளித்திருக்கின்றோம். தொடர்ந்தும், அதைப் பற்றிப் பேசிக் கொண்டு வருகின்றோம். இந்த அடிப்படையில் இங்கே மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை நாங்கள் எல்லா நன்கொடையாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வலியுறுத்தி வருகின்றோம்.

**கேள்வி:-**

உங்களது மதிப்பீட்டின் அடிப்படையில் எவ்வளவு தொகை மதிப்பிடப்பட்டுள்ளது.

**பதில்:-** ஏறத்தாழ 113பில்லியனுக்கும் மேற்பட்ட தொகையே மதிப்பீடாக அமைந்துள்ளன. இது ஒவ்வொரு தொகுதியாக ஒதுக்கீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது தமிழர் தாயகப் பகுதியின் அனைத்து பிரதேசங்களினதும் மதிப்பீடாகவே அமைகின்றன.

**கேள்வி:-**

பொதுக் கட்டமைப்பை உருவாக்குகின்ற விடயத்தில் அரசாங்கத்தின் போக்குகள் உங்களுக்கு நம்பிக்கையற்றதாகப் படுகின்றதா?

**பதில்:-** நிச்சயமாக ஏனெனில் அரசாங்கம் விடுதலைப்புலிகளோடு ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதாக நாங்கள் பேசிக் கொண்டிருப்பதாகவும், ஒரு தோற்றப் பாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கின்றதே தவிர அப்படியான ஒரு கட்டமைப்பை நிறுவி விரைந்து எங்கள் மக்களின் மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு முயற்சி எடுப்பதாகத் தெரியவில்லை. இப்படியான ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கி சர்வதேச உதவிகளை கவர்ந்து இழுக்கும் முயற்சியிலேதான் தீவிரமாக இறங்கியிருக்கின்றார்களே தவிர பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகச் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் சம்பந்தமாகவோ, மனிதாபிமான வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவோ அரசாங்கம் பொறுப்புணர்வோடு நடக்கவில்லையென்பதுதான் எங்களால் உணர முடிகின்றது.

**கேள்வி:-** இவ்விடயத்தில் சர்வதேச நிதிவழங்கும் நாடுகளின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது?

**பதில்:-** உதவி வழங்கும் நாடுகள், சர்வதேச சமூகம், நிதி நிறுவனங்கள் எல்லோருமே முழு அளவிலான அழுத்தத்தைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றார்கள். இருதரப்பும் இணைந்து ஒரு பொதுக்கட்டமைப்பை நிறுவுவதற்கூடாகவே சர்வதேச உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியாகப் போய்ச் சேரும் என்பது அவர்களினது எண்ணப்பாடாகவும், அவர்களுடைய விருப்பமாகவும் இருக்கின்றது. அதற்கேற்ற வகையில் அரசாங்கத்தின் ஆதரவோ, ஒத்துழைப்போ இல்லாத நிலைதான் இன்று அரசாங்கம் அவ்வாறான ஒரு கட்டமைப்பை நிறுவுவதற்கான சூழல் உருவாகாமல் இருக்கின்றது. அதனால்தான் நாங்கள் சர்வதேச சமூகத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்திக்கொண்டு வருகின்றோம். இலங்கை அரசாங்கத்தை நம்பிக்கொண்டிருக்க முடியாது. எமது மக்களுக்கு அவசரமான மனிதாபிமானத் தேவை ஏற்பட்டிருக்கின்றது. மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே சர்வதேச உதவிகள் நேரடியாக இங்கு கொண்டு வரக்கூடிய வழிமுறைகளை சர்வதேச சமூகம் கண்டறிய வேண்டும். என்றுதான் எங்களால் வலியு றுத்தப்பட்டு வருகின்றது.

**கேள்வி:-** அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் சர்வதேச சமூகத்தின் உதவிகள் நேரடியாக இங்கு வருவதற்கான நிலைமைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றதா?

**பதில்:-** சர்வதேச சமூகத்திற்கு ஒரு கடப்பாடு இருக்கின்றது. பாரிய மனிதாபிமான நெருக்க டியை ஒரு மனித சமூகம் சந்தித்திருக்கின்றபொழுது அங்கு விரைந்து வந்து மனிதாபிமான உதவிகளைச் செய்வது சர்வதேச சமூகத்தின் கடமையும், பொறுப்பும் கூட. அந்த வகையில் பேரழிவைச் சந்தித்து நிற்கின்ற எமது மக்களுக்கும், எமது தாயகப் பிரதேசத்துக்கும் சர்வதேச சமூகம் வந்து உதவி புரியும் என நாங்கள் நம்புகின்றோம். அதற்கான முயற்சிகளை அனைத்து மட்டங்களுடனும் ஈடுபட்டு வருகின்றோம்.

**கேள்வி:-** சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?

**பதில் :** இம்மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த அழிவுகளிலிருந்து மீண்டெழுந்து மீண்டும் நம்பிக்கையோடு இந்த தேசத்திலே தமது வாழ்வு நிலைகளை அமைத்து அவர்களுடைய பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக எமது தேசியத் தலைவரின் பணிப்பிற்கிணங்க அனைத்து கட்டமைப்புகளையும் நாங்கள் முடுக்கிவிட்டிருக்கின்றோம். பல நிவாரணப் புனர் வாழ்வுப் பணிகள் எங்களால் இருக்கின்ற முழுவளங்களையும் பிரயோகித்து. உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவிகளை யும்உள்வாங்கி நாங்கள் பணி களை மேற்கொண்டு வருகின்றோம். அந்தந்தப் பகுதிகளுக்குள் எங்களுடைய பெருமளவான போராளிகள் நின்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான அடிப்படை வசதிக ளையும் தற்காலிக இருப்பிடங் களையும் அமைத்தல் போன்ற பல பணிகளை எமது போராளிகள் நேரடியாக நின்று செய்து வருகின்றார்கள். இந்த அனைத்துப் பணிகளையும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு எமது தேசியத் தலைவர் பூரண ஆதரவையும் பங்களிப்பையும் செய்து வருகிறார். தொடர்ந்தும் மக்களின் நலனில் நாங்கள் முழு கவனத்தையும் செலுத்தியே வருவோம். (ச.கு)

## சுனாமி....

செயற்பாடுகளை இன்னும் திறம்பட எவ்வாறு கொண்டு செல்லலாம் என நாம் கலந்துரையாடினோம். அத்துடன் நடுத்தர நீண்டகால செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுக்கலாம். என்பது பற்றியும், பேசினோம். ஆனால் இது பற்றி எவ்விதமான அறிவிப்பையும் விடுப்பதற்கு இல்லை. சுனாமியின் தாக்கத்திற்கு பின்னதான காலத்தில் சமாதான நடவடிக்கைகளில் எதுவித முன்னேற்றமும் காண முடியவில்லை எனவும் ஹான்ஸ் பிரஸ்கர் தெரிவித்தார்.

## சூமாமியால். பாதிக்கப்பட்ட.

.நடந்த ஒரு சில நாட்களிலேயே பில் கிளின்ரனையும் தனது தந்தை ஜோர்ஜ் புஷ்சையும் அமெரிக்காவில் நிவாரண நிதி சேகரிப்புப் பணிகளுக்கு பொறுப்பானவர்களாக தற்போதைய அமெரிக்க சனாதிபதி புஷ் நியமித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இது போன்றே ஐக்கிய நாடுகள் சபையும், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களின் புனர் நிர்மாண மற்றும் நிவாரண வேலைகளை மேற்பார்வையிடும் தனது விசேட பிரதிநிதியாக பில் கிளின்ரனை நியமித்திருப்பதும் தெரிந்ததே.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது